தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

திங்களிதழ்

துணர் : 57

மலர் : 5

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு : 2014—உருத்ரோத்காரி ஆனி
(1983 ஜூன் – ஜூலை)

பொழிற்றொண்டர் :
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர் : 53 | உள்ளுறை | மலர் : 3

1. தொல்காப்பியரும் சைவசித்தாந்தமும் 97
திரு. த. ரா. முருகவேள், M.A., M.O.L.,

2. மீன் வழிபாடு ... 116
இராஜ். பவுன்துரை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

3. தமிழரின் தொல்வனப்புகள் 127
புலவர். பொன். முனியப்பன், எம். ஏ.,

4. கடியன் 135
பி. எல். சாமி, ஐ. ஏ. அசு.

5. எது கவிதை? 138
புலவர். இரா. மணியன், M. A.,

6. பெரியகுளத்துக் கல்வெட்டும்
சுவடற்றுப்போன சுற்றார்களும் ... 142
புலவர். து. இராசகோபால்

தமிழ் வாழ்க !

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

துணர் : 57	திருவள்ளுவர் யாண்டு — 2014 உருத்ரோத்காரி — ஆனி 1983 ஜூன் — ஜூலை	மலர் : 3

தொல்காப்பியரும் சைவசித்தாந்தமும்

திரு. ந. ரா. முருகவேள், M.A; M.O.L;

முன்னுரை :

நமது தமிழ் மொழியிலுள்ள நூல்கள் அனைத்திலும், மிக மிகப் பழமையும், பெருமையும் வாய்ந்தது, தொல்காப்பியமேயாகும். இதன் காலம் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்கள் உடன்பட்டுள்ளனர் (1).

இத்தகைய பழம்பெரும் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலேயே, சமய தத்துவக் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன.

''தொல்காப்பியம் என்னும் பழமைமிக்க இலக்கண நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள், வாழ்க்கைஇயலின் இலக்கணத்தை,விளக்குவதற்குத் தேவையான த்த்துவக் குறியீட்டுச் சொற்களுடன் கலந்த நிலையில், ஒன்று பட்டுத் திகழ்கின்றன. தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற எழுத்துக்கள் சொற்கள் சொற்றொடர்கள் ஆகியவற்றிற்கு உரிய இடத்தில், அவைகளுக்கு ஒப்புமையுடைய தெய்வீகத் தத்துவச்

குறிப்பு :

தொல்காப்பியம் தொல்லாசிரியன்மார் கூறிய குறியீடுகளையும் இலக்கணக் கோட்பாடுகளையுமே பெரும்பான்மையும் கூறுகின்றது. எனினும் அம்முன்னூல்கள் யாதும் கிட்டாமையின் அவற்றைத் தொல்காப்பியர் கூற்றாகவே வைத்துக் கட்டுரையாசிரியர் விளக்கியுள்ளார்போலும். நூற்பா விளக்கங்களைப் பெரும்பான்மையும் உரையாசிரியன்மார் கருத்துக்களை மேற்கொண்டே கூறியுள்ளார். இலக்கணம் என்னும் ஒப்புமை கருதி நன்னூல் நூற்பாவும் இடம்பெற்றுள்ளதுபோலும். சைவசித்தாந்தம் எனத் தலைப்பிட்டிருப்பினும் பொதுவான தெய்வ வழிபாட்டு நெறியும் கலந்துள்ளது.

— பதிப்பாசிரியர்.

சொற்களை மாற்றி அமைத்தால், தொல்காப்பிய விதிகள் அல்லது நூற்பாக்கள், தமிழ் மொழியின் அமைப்பியலை விளக்குவது மட்டுமன்றி, மக்களின் வாழ்க்கையினையும் விவரித்து விளக்குபவை யாகத் திகழ்வதைக் காணலாம். இவ்வுண்மை தொல்காப்பியத் தினை மேல்நோக்காக ஒருசிறிது காண்போர்க்குங்கூடத் தெற் றென விளங்கும்" (2)

(1) உயிர், மெய் :

ஆசிரியர் தொல்காப்பியர், தமிழ் இலக்கணத்தில் எழுத்துக் களுக்குப் பெயரமைத்திருக்கும் முறையே, தமிழ் மக்களின் நுண்மாண் நுழைபுலத்தினை நுனித்துணர்த்த வல்லதாயுள்ளது. தாமே தனித்தியங்கவல்ல எழுத்துக்களுக்கு 'உயிர்' என்றும், உயிரோடு கூடியல்லது இயங்கலாற்றாத எழுத்துக்களுக்கு 'மெய்' என்றும், உவமை ஆகுபெயராற் காரணம் பற்றிச் சமய தத்துவக் கருத்தின் அடிப்படையில் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் தலைசிறந்த தத்துவ ஞானத்தினை இப்பெயர்கள் தகவுற விளக்குகின்றன. (3)

இப்பெயர்களின் குறிப்புகளுக்கு முன்னொடுபின் சிறிதும் முரணாமலே, தமிழில் எழுத்திலக்கணம் வகுக்கப்பெற்றுள்ளது. க்ருபை, த்யானம் என்னும் வடசொற்களிற் போல, மெய் எழுத்துக்கள் தமிழில் மொழி முதற்கண் வருவதில்லை.

'' உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா ''

என்பது தொல்காப்பியச் சூத்திரம். சொற்களில் மெய்யெழுத்துக்கள் முதலாக வருதல் கூடாது என்னும் வரையறை, அழிந்துபடும் இயல்பிற்றாகிய உடம்பின் இழிதகவையும், அழியா இயல் பிற்றாகிய உயிரின் மேம்பாட்டினையும் உணர்த்தும் வகையில், அறிவிற்குப் பொருத்தமாகச் செய்யப்பட்டிருப்ப தொன்றாகும்.

(2) மெய்யின் வழியது உயிர் :

'' உயிர் மெய் எழுத்துக்களுள், உயிரெழுத்துக்கள் பின்னும், மெய் எழுத்துக்கள் முன்னும் ஒலிக்கும் '' என்பது இலக்கணம். உயிரின் அறிவும் இயல்பும் அது சாரும் உடம்பிற்கு ஏற்பவே அமையும். ஓர் ஆளில் அல்லது உயிர்ப்பொருளில், உயிர் உடம்பு என இருபொருள் கலந்திருப்பினும், காண்பார்க்கு உடம்பே முற்பட்டுத் தோன்றும். அதன் பின்னரே அதற்குள் உயிர் இருப்பது அறியப்படும். அதுபோல உயிர்மெய் எழுத்திலும் மெய்யெழுத்தே முன் ஒலிக்கும்; அதன் பின்னரே உயிர் ஒலிக்கும். இவ்வுண்மையினையே,

''மெய்யின் வழியது
உயிர் தோன்றும் நிலையே''

என்று இலக்கண நூலார் வகுத்துரைத்தனர். இந்நூற்பா இலக்கணநூற் கருத்தும், தத்துவ நூற்பொருளும் ஒருங்கமையச் சிறந்து விளங்கும் திறம், பெரிதும் போற்றுதற்குரியது.

(3) மெய்யும் உயிரும் :

உயிர்மெய்யெழுத்து, தன்னுடன் கூடிய உயிரானது புணர்ச்சியின்கண் நீங்கிய வழித் தன்புள்ளி வடிவுபெறும் என்னும் இலக்கணக் கருத்து,

''மெய்உயிர் நீங்கின்
தன்உரு ஆகும்''

எனவரும் நூற்பாவால் உணர்த்தப்பெறும். இதன்கண் ''உடம்பை விட்டு உயிர் நீங்கி விடுமாயின், அங்ஙனம் உடலாகிய சிறையினின்று விடுபட்ட உயிரானது, தனக்குரிய முழுநிறைவான இயல்புகளை எய்தி நிற்கும்'' என்னும் தத்துவ நூற்பொருளும் கொள்ளுதற்கு இடமுள்ளது.

4. புள்ளியீற்று முன் உயிர் :

புள்ளியீற்றுச் சொல்முன் உயிர் தனித்து நடவாது; தான் தனித்துநின்ற அவ்வியல்பினைக் கெடுத்து, அப்புள்ளியோடு கூடும் என்பது,

''புள்ளியீற்று முன் உயிர் தனித்து இயலாது
மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே''

என்னும் நூற்பாவின் பொருள். இதற்கே, ''உயிர் தனது வினைப் பயன்களை நுகர உடலின் சேர்க்கையை அடையும்; உடலின் சேர்க்கையின்றி வினைப் பயன்களை உயிர் தானே தனித்து நின்று நுகரப் பெறாது'' என்னும் தத்துவ நூற்பொருளும் கொள்ளலாம். இவ்வுண்மையினை, ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் தமது மணிமேகலையில், ''வினையின் வந்தது'' ''வினைக்கு விளைவாயது'' என்றும், பட்டினத்தடிகள் ''வினைப் போகமே ஒரு தேகங் கண்டாய், வினைதான் ஒழிந்தால் தினைப் போதளவும் நில்லாது கண்டாய்'' என்றும் பாடித் தெளிவுறுத்தி யிருத்தல் சிந்திக்கத்தக்கது.

5. உடம்படு மெய் :

உயிரீறு நிலைமொழியாய் நிற்க, அதன்முன் உயிர்முதற்

சொல்வரின், அவ்விரண்டு உயிர்கட்கும் இடையே உடம்படு மெய் வரப்பெறும். மணி அழகு மணியழகு என்புழியும், சே அடி சேவடி என்புழியும் முறையே, யகர வகர உடம்படு மெய்கள் வரப் பெறுதல் காணலாம்.

''எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்''

என்பது இதற்குரிய நூற்பா. உயிரும் உயிரும் தம்முள் ஒன்று சேரமாட்டா. ஆதலின் அவற்றிற்குப் பற்றுக்கோடாக ஓர் உடல் இன்றியமையாது வேண்டப்படும் உயிர் சேர்தற்கு உடல் இன்றியமையாதது; ஓர் உடலைப் பற்றி நின்றே உயிரானது இயங்கும் என்னும் தத்துவ நூற்பொருளும், இலக்கணச் செய்திகளுடன் இந்நூற்பாவிற் கொள்ளப்படக் கிடக்கின்றது.

(6) உயிரியல் திரியாது :

உயிர்மெய்யாவன, மெய்களோடு உயிர் எய்தலால் பிறந்த எழுத்துக்கள் ஆகும். உயிரையுடைய மெய், உயிர் மெய்யாகும். இதனை 'உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்து' என்று உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கருதுவது தவறு. ஆயினும் அவ் உயிர் மெய்கள், அவ்வியைபின் கண்ணே உயிரும் மெய்யுமாகிய இவ்விரண்டும் அல்லாத வேறொரு எழுத்தாய் நிற்கும். இங்ஙனம் பன்னீருயிரும் பதினெட்டு மெய்யுடன் கூடி உயிர் மெய்யாய் நின்றனவாயினும், தம் அளவும் குறியும் எண்ணும் திரிந்து நில்லா. இதனை,

'மெய்யொடு இயையினும் உயிரியல் திரியா"

என்னும் தொல்காப்பிய நூற்பா சுட்டுகின்றது. இதன்கண், ''உயிரானது உடம்போடு கூடி நிற்பினும், அவ்வுயிரின் இயல்பும் உடம்பின் இயல்பும் ஒன்றாக மாட்டா. உயிரின் இயல்பு, உடம்பினது இயல்பினின்று வேறுபட்டுத் தனித்தே நிற்கும்'' என்று வேறொரு பொருளும் புலப்படுதல் காணலாம்.

(7) உடல்மேல் உயிர்வந்து ஒன்றும் :

நிலைமொழி ஈறுமெய்யாய் நிற்க, வருமொழியின் முதல் உயிராய் இருக்குமாயின், நிலைமொழி ஈற்றின் மெய்யின் மீது வருமொழி முதலின் உயிரானது ஏறி இரண்டும் ஒன்று சேர்ந்து உயிர் மெய்யாகி நிற்கும் சிவன் அருள் என்னும் இரு சொற்களும் ஒன்றாகப் புணருங்கால், சிவனருள் எனப் புணர்தல் காணலாம். இதற்குரிய விதி

''உடல்மேல் உயிர்வந்து
ஒன்றுவது இயல்பே''

என்னும் நூற்பாவாகும். இவ்விலக்கண நூற்பாவின் கண்ணேயே, '' உருவமாய் அறிவிலதாய் அழியும் இயல்பினதாகிய உடலின் மீது, அருவமாய் அறிவுடையதாய் அழியா இயல்புடையதாகிய உயிரானது வினைவயத்தால் புணர்ந்து ஒன்றாய் நிற்கும்' என்னும் உயரிய தத்துவப்பொருளும் ஒருங்கே அமைந்திருத்தல் உணர்ந்து இன்புறுதற்குரியது

(8) அகரமொடு சிவணும் :

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், மொழிமரபியலில் ஆசிரியர் தொல்காப்பியர், மெய்களின் ஒலிப்பும் அசைவும் அகர எழுத்தினைச் சார்ந்து பொருந்தியே அமையும் என்கிறார். இக்கருத்துத் தோன்ற அவர் அருளிச்செய்த,

''மெய்யின் இயக்கம்
அகரமொடு சிவணும்''

எனவரும் நூற்பாவிற்கு, ''இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்பமுடிந்தாற்போல, அகரமும்உயிர்க்கண்ணும், அவற்றின் தனிமெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாகவே நிற்கும் என்பது ஒப்பமுடிந்தது. 'அகர முதல' என்னும் குறளால் 'அகாமாகிய முதலையுடையது உலகம்' என வள்ளுவர் கூறியவாற்றாலும், 'கண்ணன் எழுத்துக் களில் அகரமாகின்றேன் யானே' எனக்கூறியவாற்றாலும், பிற நூல்களாலும் உணர்க'' என நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் விளக்கவுரை இங்கு அறிந்து இன்புறற்பாலது.

(9) உயர்திணை, அஃறிணை :

தமிழ் மொழியின் எழுத்துக்களைத் தத்துவ அடிப்படையில் உயிர் எழுத்து மெய்யெழுத்து என்று பிரித்துப்பெயர் வழங்கினாற் போலவே, உலகியற்பொருள்களையும் உயிர்களையும்கூடத் தத்துவ அடிப்படையிலேயே உயர்திணை அஃறிணை எனப் பாகுபாடு செய்து, தமிழ்ச் சான்றோர்கள் வழங்கியிருக் கின்றனர்(4).

''உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவர்அல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே''

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள்வேறு—மக்கட் சுட்டுவேறு எனப்பாகுபாடு செய்து, 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அதுவே மக்கட்சுட்டாகும்' என்று வரையறைப்படுத்தி விளக்கி யிருக்கும் நுட்பம் பெரிதும்போற்றற்பாலது.

''தக்கஇன்ன தகாதன இன்ன வென்று
ஒக்க உன்னலர் ஆயின், உயர்ந்துள
மக்களும் விலங்கே; மநு வின்நெறி
புக்கவேல், அவ் விலங்கும் புத்தேளிரே"

-கம்பர்

எனவரும் சிறந்த நல்ல பாடல், இந்நூற்பாவின் பொருளையே அடிப்படையாகக் கொண்டு அமைவதாயிற்று. உடம்பு ஒன்றே பற்றியன்றிப் பண்பும் உணர்வும் பற்றியே, மக்கள் அல்லது மாக்கள் என்பது துணியப்படும் என்றதனால், தொல்காப்பிய நூலின் சமய தத்துவ அடிப்படை தெற்றென விளங்கும்.

(10) வினைக் கொள்கை:-

இவ்வாறே, ஆசிரியர் தொல்காப்பியர் வினைச்சொல் குறித்து வகுத்துள்ள இலக்கணமும், பெரிதும் வியந்து போற்றற்பாலதாக இருக்கின்றது. சொற்கள் பெயர்-வினை—இடை—உரி என நான்கு வகைப்படும். ஆயினும் இவற்றுள் பெயரும் வினையுமே மிகவும் முதன்மை வாய்ந்தவை. பெயர்ச்சொல்லின் அடியாக வினைச் சொற்களும், தம்முள் ஏற்ற பெற்றி தோன்றும். வினைச் சொற்களுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே உள்ள வேறு பாட்டினை,

''வினைஎனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''

எனத் தொல்காப்பியம் விளங்குகின்றது. இதன்படி, முருகனை—முருகனால்—முருகனுக்கு என்றாற்போலப் பெயர்ச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்றுவரும். ஆனால் வினைச் சொற்கள் வேற்றுமையுருபுகளை ஏற்று வருவதில்லை. வந்தான்-வருகின்றான்—வருவான் என்றாற் போல, வினைச்சொற்கள் காலம் காட்டிவரும். பெயர்ச் சொற்கள் காலம் காட்டும் இயல்பு உடையன அல்ல. எனவே, வினைச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏலாமல், காலம் காட்டிவரும் இயல்புடையன என்பது, இந்நூற்பாவின் திரண்ட பொருள்.

இனி இதனைக் கூர்ந்து நோக்கின், வேறொரு சிறந்த பொருளும் இதன்கண் அமைந்திருத்தல் காணலாம். நாம் செய்யும்

ஒவ்வொரு செயற்கும், அதற்குரிய பயன் திண்ணமாக உண்டு. நற்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய நன்மையையும், தீச்செயல் புரிவோர் அதற்குரிய பயனாகிய தீமையையும் அடைந்தே தீருவர். ''வினை எனும் சொல் செயலையும், அதன் பயனையும், அப்பயனைத் தரும் தெய்வத்தையும் முறையே குறிக்கும். அவரவர் செயலுக்கு ஏற்பப் பயன்களை எய்துவிக்கும் பால்வரை தெய்வமானது (சொல்-57), வினைப் பயன்களை எய்தவிக்குங்கால், செல்வர், வறியர், கற்றார், கல்லார், உயர்ந் தோர், தாழ்ந்தோர் என்பன போன்ற வேற்றுமைகளைச் சிறிதும் கருதுவதில்லை. வினைப்பயன்கள், வினை செய்தோரை அடைந்தே தீரும். ஆயினும், வினைப்பயன்கள், ஒரு போழ் தத்தேயோ உடனடியாகவோ அன்றி, அவ்வவற்றிற்குரிய காலங்களிலேயே முறைப்படி வந்தெய்தும்...'' எனப் பிறிதொரு சிறந்த தத்துவ நூற்பொருளும், இந்நூற்பாவின்கண் அமைந்து விளங்குதல் காணலாம் (5).

(11) தெய்வ வழிபாடு:

உணவும் நீரும் காற்றும் நீராடலும் மருந்தருந்தலும் உடல் வாழ்விற்குப் பலவகை நலன்களை விளைவித்தலைப் போல, நமது உயிர் வாழ்விற்கு வழிபாடு மிகப் பெரிதும் இன்றியமை யாததாகப் பெரு நலங்களைப் புரிகின்றது. அதுபற்றியே, இற்றைக்குச் சற்றேறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே,

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே''

என்ற நூற்பாவில், ஆசிரியர் தொல்காப்பியர் வழிபாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களாயினார் ஒவ்வொருவர்க்கும் வழிபாடு மிக மிக இன்றியமையாத தொன்று என்பார் ''வழிபடு'' என்றும்; அது மனிதரையோ பிறபிற பொருள்களையோ பற்றி நிகழாமல், ஒப்பு யர்வற்ற தெய்வத்தைக் குறித்தே நிகழ்த்தப்படுதல் வேண்டும் என்பார் ''தெய்வம்'' என்றும்; வழிபடுவோரை வழிபடப்பெறும் தெய்வம் காத்தருளுதல் திண்ணம் என்பார் ''நிற்புறம் காப்ப'' என்றும்; வழிபாட்டின் பயனாக எல்லா வகையான எத்தகைய விழுமிய செல்வங்களையும் எய்தப் பெறுதல் இயலும் என்பார் ''பழிதீர்செல்வமொடு'' என்றும் ''மூவேழ் சுற்றம் முரண்உறு நரகிடை ஆழா மேஅருள் அரசே போற்றி'' என மணிமொழியார்

பாடியதற்கு ஏற்ப, வழிபடுவோர் மட்டுமேயன்றி அவர்தம் வழியாகவரும் உற்றார் உறவினரும் கூட,வழிபாட்டின் பயனாகச் சிறப்புற்றுப் பொலிந்து இன்புற்று வாழ்வார்கள் என்பார் ''வழிவழி சிறந்து பொலிமின்'' என்றும், நுண்ணிதின் எண்ணியுணரும்படி ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்வாராயினர்.

(12) தொல் முதற்பொருள் :

ஆசிரியர் தொல்காப்பியர், தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், பொருள்களை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்தார். அவற்றுள் நிலத்தையும் காலத்தையும் ''முதற்பொருள்'' எனக் குறித்தார். நிலத்தை முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என நான்காகப் பகுத்து, அவற்றிற்கு முறையே மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன், சிவபிரான்), வருணன் என்றும் தெய்வங்களைக் குறித்தார். தெய்வ வழிபாட்டின் இன்றியமையாமை பற்றி, முதற்பொருளாகிய நிலத்தைக் கூறவந்த இடத்திலேயே, கருப்பொருளாகிய தெய்வ வழிபாட்டையும் சேர்த்து இயைத்தே, தொல்காப்பியர் கூறியருளியுள்ளார். காலத்தெய்வம், பால்வரை தெய்வம் முதலிய வேறுபிற கடவுளரையும்கூட, அவர் குறிப்பிட்டிருத்தல் காணலாம். (தொல் சொல்–58)

(13) அறுவகை வாழ்த்து :

இனி, பொருளதிகாரப் புறத்திணையியலினுள் 81 ஆம் சூத்திரத்தில், 'அமரர்கண் முடியும் அறுவகையானும்' என்றமையால், வானவர் உட்பட ஆறுவகையினரை வாழ்த்துதல் பண்டைய மரபாக இருந்தது. அவர்கள் முறையே, வானவர் முனிவர் ஆனினம் மழை அரசன் உலகம் எனப்படுவர். இத்தொல்காப்பிய நூற்பாவை ஒட்டியே,

''வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயதுः எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே"

என்னும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல், அமைந்திருக்கக் காண்கின்றோம்.

(14) கொடிநிலை கந்தழி வள்ளி :

பண்டைக்காலத் தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கையும், கடவுள் வழிபாடும் உடையவர்களாக விளங்கியிருந்தனர். அவர்கள் முழு

முதற் கடவுள் வழிபாடு செய்து போந்ததுடன், அவரோடு தொடர்பு படுத்தி இயற்கைப் பொருளாகிய ஞாயிறு திங்கள் தீ என்பனவற்றையும் ஏற்றபெற்றி போற்றி வழிபட்டு வந்தனர். இவ்வுண்மையினை

" கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே "

எனவரும் புறத்திணை இயல் 88ஆம் நூற்பாவினால் அறியலாம். கொடிநிலை (ஞாயிறு), கந்தழி (தீ), வள்ளி (திங்கள், மழை) என்ற மூன்றும், கடவுள் வாழ்த்தொடு சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் பொருந்திவரும் என இத் தொல்காப்பிய நூற்பாக் குறிப்பிடுகின்றது. இக் கருத்தினைத்தழுவியே சிலப்பதிகாரத்தில் 'ஞாயிறு போற்றுதும்' 'திங்களைப் போற்றுதும்' 'மாமழை போற்றுதும்' என்னும் வாழ்த்துக்கள், அமைந்தன எனலாம்.

இனி இந்நூற்பாவுக்கே "கடவுள் வாழ்த்து, முதற்கண் அமையும்; பின்னர் அதனையடுத்துக் கொடிநிலை (வான்சிறப்பு), கந்தழி (நீர்த்தார் பெருமை), வள்ளி (அறன் வலியுறுத்தல்) என்னும் வடு நீங்கு சிறப்பின மூன்றும், கடவுள் வாழ்த்துடன் சேர்த்துக் கருதப்பெறும் நிலையில் வரப்பெறும்" என வேறொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் பொருள் கொள்ளுதல் ஆசிரியர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள் நூலின் அமைப்பிற்கு மிகவும் பொருந்தி நிற்கின்றது.

(15) கோயிலும், படிமையும் :

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழகத்திற் கோயில்கள் இருந்தன. "இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்" எனவரும் எழுத்ததிகார நூற்பா, கோயில் என்னும் சொல்லுக்கு இலக்கணம் வகுத்திருத்தலால், இவ்வுண்மை செவ்விதின் உணரப் படும். அக்கோயில்களில் தெய்வத் திருவுருவங்கள் இருந்து வந்தன; அவற்றிற்குப் பூசைகளும் விழாக்களும் நிகழ்ந்து வந்தன. அவைகள் முறைப்படி தவறாமல் நிகழ்த்தப் பெற்று வருகின்றனவா? என்று, அரசர் அல்லது தலைவர்கள் கண்காணித்து அறப்புறங் காவல் புரிந்து வந்தனர். இவ்வுண்மை,

"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே"

எனவரும் நூற்பாவில் ''படிமை (பிரதிமை,) ஆவது, தேவர்க்கு ஒப்புமையாக நிலத்தின்கண் செய்து அமைத்த தேவர் மேல் வந்தது. அவருடைய பொருளாவன பூசையும் விழாவும் முதலியன" என, ஆசிரியர் இளம்பூரணர் விளக்கவுரை வரைந் திருத்தல், கடவுளரின் திருவுருவ வழிபாடு முதலியன, தொல்காப்பியர்க்கு உடன்பாடேயாம் என்பதனை வலியுறுத்தும்.

(16) அறுவகைச் சமயம் :

அம்மை வழிபாடு, விநாயகர் வழிபாடு, முருகன் வழிபாடு, சிவ வழிபாடு, திருமால் வழிபாடு, கதிரவன் வழிபாடு என்னும் அறுவகை வணக்கமே. பிற்காலத்தில் பேசப்பெற்ற ''அறுவகைச் சமயம்" என்னும் வழக்கத்திற்கு அடிப்படையாக அமைவதாயிற்று. இந்த அறுவகைத் தெய்வங்கட்குப் பூசனை புரிவோரையே,

> *''அறுவகைப் பட்ட*
> *பார்ப்பனப் பக்கம்"*

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருத்தல் கூடும். ''ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறு வகைத் தொழில்களைச் செய்பவர்கள்" என்னும் நச்சினார்க்கினியர் உரைக்கு வேறான புதிய நல்ல பொருள் இது எனலாம்.

(17) தாபதப் பக்கம்

இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றப் பெற்றதாகிய தொல்காப்பியம் புறத்திணையியலின்கண் உள்ள வாகைத்திணைப் பிரிவில், ''நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்'' என ஒரு பகுதி கூறப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

''நாலிரு வழக்கில் தாபதப் பக்கமாவது முக்காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத்தின் வழி நின்று, வீடுபெற முயல்வோருக்கு உரியவாகிய, எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறுபாடு. இவ்வெட்டும் தவஞ் செய்வோருக்கு உரியன என்றும், தவம் செய்து யோகம் புரிவோர்க்கு உரியன என்றும், இரு வகைப்படும்.

அவற்றுள் தவஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என்பன.

இவற்றிற்கு உணவிலும் நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், ஐந்தீ நாப்பணும் நீர் நிலையிலும் நிற்றல், தாமரையும் ஆம்பலும் ஆமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற்காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள்.

இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன: இயமம், நியமம், ஆசனம், வளிநிலை (பிராணாயாமம்), தொகைநிலை (பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை), நினைதல் (தியானம்), சமாதி என்பன, என்று மிகவும் விரிவாக விளக்கியுள்ளார். இவற்றால் தொல்காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, தவஞ் செய்வோரும், தவம் செய்து யோகம் புரிவோரும் ஆகிய பலர், தமிழகத்தில் இருந்தனர் என்பது தெரிகின்றது (6).

(18) வேண்டிய கல்வி :

இனி, தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் கல்வியிற் பிரிவு பற்றிய காலவரையறையினை யுணர்த்துவது,

"வேண்டிய கல்வி யாண்டுமூன்று இறவாது"

என்னும் தொல்காப்பிய நூற்பா. இதன்கண் உள்ள 'யாண்டு' என்னும் சொல்லைக் காலப் பெயராகக் கொண்டு, "கல்வியிற் பிரிவுக் காலம் மூன்றியாண்டு கடவாது" என்ற பொருள் கூறுவர் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியரோ, திருவள்ளுவர் சாந்துணையும் கற்குமாறு பணித்தலின், கல்வியிற் பிரிவுக்குக் காலவரையறை செய்தல் பொருந்தாது, கல்விக்குக் கால வரையறையில்லை எனக் கருதி 'ஆண்டு' எனப் பிரித்துக் 'கல்வியிற் பிரிவாகிய அவ்விடத்தே' எனப் பொருள் கொண்டு, அக்கல்வியெல்லாம் மூன்றுபதத்தை அல்லது பொருளைக் கடவாது என பொருள் விளக்குகின்றார் தலைவன் ஓதற்பிரிவின்கண் இறை–உயிர்–தளை (பதி- பசு-பாசம்; சித்து - அசித்து - ஈசுவரன்; சகம்-சீவன் – பரம்; அது – நீ – ஆனாய்; தத் – துவம் – அசி) என்னும் முப்பொருள்களையும் பற்றிய தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுவான் எனக் குறிப்பிடுகின்றார்.

"பலகலை ஆகம வேதம் யாவையினும்
கருத்துப் பதிபசு பாசம் தெரித்தல்"

–சிவப்பிரகாசம்

''சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள; மறையெலாம் மொழிய நின்றன;
ஆன்ற தொல்பதி, ஆருயிர்த்தொகை,
வான்திகழ் தளைஎன வகுப்பர் அன்னவே"

–கந்தபுராணம்

(19) சிறந்தது பயிற்றல் :

இங்ஙனமே, முன்னர் இல்லறம் நிகழ்த்திய தலைவனும் தலைவியும், பின்னர் இறையருட்பேற்று முயற்சியில் தலைப்படும் திறம் இது எனப் பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் தெளிவுறக் கண்டுணர்ந்து வரையறை செய்திருந்தனர்.

"காமம் சான்ற கடைக் கோட்காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியுஞ்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''

என்பது, தொல்காப்பியர் கற்பியற் சூத்திரம். "காதல் அன்பால் துய்த்த காமஇன்பம் நிறைந்து, கடைகொண்ட வாழ்நாள் எல்லையின் நடுக்காலத்தே, தமக்குக் காவலாய் அமைந்த தம் புதல்வரோடு கூடியிருந்து, தாம் அதுகாறும் செய்துபோந்த அறத்தை இனித் தாம் செய்யலாகாமையின், தமக்காக அவ்வறத்தைச் செய்யும் சுற்றத்தாருடன் அமர்ந்து, குடும்பத் தலைமகனும் தலைமகளும் சிறந்ததாகிய தவத்தில் தமது உணர்வினைப் பயிலச் செய்தல், தாம் அதுகாறும் செய்துபோந்த காதல் மனைவாழ்க்கையின் பயனாகும்'' என்பது, இந்நூற்பாவின் திரண்ட சிறந்த தெளி பொருள்.

(20) தவநெறியும் பேரின்பமும் :

புறச் சமயத்தவர்களின் செயற்கை நெறித் துறவொழுக்கத்திற்கும், பண்டைத் தமிழ் மக்களின் பண்பட்ட இயற்கைத் தவநெறி வாழ்க்கைக்கும், உள்ள இடையீடு மிகப் பெரியதாதலை, இவ்வாற்றால் உணரலாம்.

இதனாலேயே, திருவெண்ணெய்நல்லூரில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற சுந்தரர், திருத்துறையூரில் ''தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே ''என்று தவநெறியை வேண்டிப் பெற்றனராயினும், பண்மயத்த மொழிப் பரவையாரையும், மான் திகழும் சங்கிலியாரையும் மணந்து கொண்டு,பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசில்,

''செல்வநல் ஒற்றி யூரன்
செய்யசங் கிலியால் ஆர்த்து
மல்லலம் பரவை தன்கண்
மாழ்குற அமிழ்த்து மேலும்,
அல்லும்நண் பகலும் நீங்கா
தவண்மகி ழடியில் எய்தி
நல்லஇன் படைந் திருப்பன்
நம்பி ஆரூரன் தானே"

என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து போற்றிப் பாடும் நிலையில் வாழ்ந்திருந்த பான்மை, நுண்ணிதின் எண்ணி யுணரற்பாலது.

(21) இறைவனும் நூலும் :

ஆசிரியர் தொல்காப்பியனார் இறைவனுக்குரிய இலக்கணத்தினை மிகச்சிறப்பாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றார். ''பிறவிகள் தோறும் சிறிது சிறிதாய் அறிவு விளங்கப் பெறும் சிற்றுயிர்கள் போலாது இயல்பாகவே விளங்கப்பெறும் பேரறிவு உடையவனாகிய இறைவன் ஒருவன், இவ்வுயிர்களின் வேறாய் உள்ளனன்; அவன் இயல்பாகவே விளங்கி மிளிரும் அறிவினனாய்த் திகழ்கின்றான். அதற்குக் காரணம் உயிர்களின் வினைக்கு ஏதுவாகிய மலத்தாற் பற்றப்படாமல், பெருந்திண்மையும் நுட்பமும், மேன்மையும் உடையவனாய் அவன் இருத்தலே யாகும்'' என்னும் பற்பல கருத்துக்களும் தெற்றென விளங்க, ஆசிரியர் தொல்காப்பியனார்,

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்''

என்று அருளிச்செய்திருத்தல், நாம் நம்முடைய கருத்திற் பெரிதும் பதிக்கற் பாற்று.

சிற்றுயிர்களும் இறைவனும் ஒன்றே என்றும்; அற்றன்று சிற்றுயிர்கள் பொய், இறைவனே மெய்யென்றும்; அதுவும் அன்று, இறைவன் ஒருவனே குடங்கள்தோறும் காணப்படும் திங்களின் சாயல் போல உடம்புகள்தோறும் உயிர்களாகக் காணப்படு கின்றனன் என்றும்; அதுவும் பொருந்தாது, நெருப்பினின்று பொறிகள் தெறித்தாற் போல இறைவனிலிருந்தே சிற்றுயிர்கள் உண்டாயின என்றும்; அதுவும் பொருத்தமன்று, ஒன்றுமில்லா

வெறும் பாழே (சூனியமே) உயிரும் இறைவனுமாம் என்றும். பிற்காலத்துச் சமயத்தார் பற்பலரும், இறைவனின் இயல்பையும், உயிரின் இயல்பையும் உலகவழக்கோடும் நூல்வழக்கோடும் சார்த்தி வரையறுத்து உணரமாட்டாமல்,பெரிதும் மயங்கிக் கலந்து கூக்குரலிட்டுக் காதிமோதி வாதாடித் தம்மிலே பூசலும் போரும் கலாமும் விளைத்து நிற்ப ; இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரேயே, உயிரின் தன்மையையும், இறைவனின் தன்மையையும், இத்துணைப் பொருத்தமாக வரையறுத்துத் தெளிவுற விளக்கியருளிய ஆசிரியர் தொல்காப்பியனார்தம் அஃகியகன்ற அறிவின் திறத்தை நாம் எங்ஙனம் புகலவல்லோம்?

இனி இந்நூற்பாவில் இறைவன் மக்களுக்கு மெய்யுணர்வு தோற்றுவித்தற் பொருட்டு, அவர்கள் மேற்கொண்ட அருளிரக்கத்தால் முதல்நூல் அருளிச் செய்தான் என்று தொல்காப்பியர் இனிது உரைத்தலால், இறைவன் பேரிரக்கம் உடையவன் என்பதும், அவன் முற்காலத்தே தெய்வத் தமிழ் மொழியின்கண் முதல்நூல் அருளிச் செய்தான் என்பதும், அதனைப் பின்பற்றி அவன்றன் அருள் பெற்ற சான்றோர்கள் பற்பலரும் வாழையடி வாழையாக வந்து தோன்றி அவ்வக் காலத்திற்கு ஏற்பப் பலவகை நூல்களை அருளிச் செய்து வருகின்றனர் என்பதும், பிறவும் விளங்கா நிற்கும்.

(22) ஒன்றி உயர்ந்த பாலது ஆணை :

இவ்வுலகின்கண் எல்லோரையும் எல்லாவற்றையும் மேல் இருந்து இயக்கி வருகின்ற இறையருள் ஆணையாகிய நியதி தத்துவம் எனனும் ஊழ் என்பதொன்று இருந்து வருகின்றது. "ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்; அன்றி அது வரினும் வந்தெய்தும் ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்" என்பது ஔவைப் பாட்டியின் அருளுரை. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" என்று இளங்கோவடிகளும் தம் நூலில் ஆங்காங்கே வற்புறுத்திச் செல்வர். கலை வித்தை அராகம் என்னும் மூன்றாலும், தொழில் அறிவு இச்சை என்னும் மூன்றும் முறையே விளங்கிப் போக நுகர்ச்சிக்கண் விழைவும், இழிந்தபோகத்தின்கண் வெறுப்பும் உடையவனாய்த் திகழும். அதனாற் பிறரால் ஈட்டப்படும் நல்வினைப் பயனைக் கவரவும், தம்மால் ஈட்டப்படும் தீவினைப் பயனை நீக்கவும், அவ்வுயிர்கள் எண்ணா நிற்கும். ஆனால் அங்ஙனமாக நிகழவொட்டாமல், அவரவரால் ஈட்டப்படும் வினையின் பயனை அவரவரே நுகருமாறு, அரசர் ஆணைபோல் நியமித்து நிறுத்தும்

இறையருளின் இயற்கை ஆணையே, நியதி தத்துவம் ஆகிய ஊழ் எனப்படும்.

ஒருபாற் கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் அரசின் ஆணையில்வழி எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து செல்லுதல்போல, நியதி தத்துவம் ஆகிய ஊழ் என்னும்இயற்கைச் சட்டம் இல்லாதவழி, ஒருவர் செய்த வினைப்பயன் மற்றொருவர் நுகர்வதாய் முடியும். ஆதலின் நியதி தத்துவம் என்னும் ஊழாகிய இயற்கைச் சட்டம் ஒன்று உண்டு என்பது, பண்டைத் தமிழகச் சான்றோர்கள் கண்ட முடிபு. இதனைப் 'பால்வரை தெய்வம்' என்று தொல்காப்பியரும் 'வகுத்தான் வகுத்த வகை' என்று திருவள்ளுவரும் சிறப்பாகக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

தலைவன் தலைவி ஆகிய இருவரும்பல பிறவிகளில் ஒருவருக் கொருவர் உரிமையுடையவராய்த் தொடர்ந்தியைந்து மணந்து மகிழ்வார் என்பது, திறவோர் காட்சியில் தெளிந்த செய்தி. அதனைக் குறித்தற்கே தொல்காப்பியர், தலைவன் தலைவியரை ஆங்காங்கே 'கிழவன்' 'கிழத்தி' என்னும் சொற்களால் விதந்து சுட்டிக் கூறுவர்.

''அண்டர்பிரான் திருவருளால்
அயலறியா மனம்விரும்பப்
பண்டைவிதி கடைக்கூட்டப்
பரவையாரும் கண்டார்"

எனச் சேக்கிழார் பெருமான் பாடுதல்போலத், தலைவனும் தலைவியும் பால்வரை தெய்வமாகிய ஊழியலின் வழியிலேயே தம்முள் ஒருவரையொருவர் சந்தித்துக் கண்டு கலந்து மகிழ்கின்றனர் என்பது, நம் பண்டைத் தண்டமிழ்ச் சான்றோர்கள் கண்டுணர்ந்த வாழ்வியற் சமய தத்துவக் கொள்கையாகும்.

''ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே"

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம், இத்தகைய பற்பல தத்துவ நுட்பக் கருத்துக்களைத் தன்னகத்தே பொதிந்துகொண்டு நிற்றல் காணலாம்.

(23) தத்துவ ஆராய்ச்சி :

சமய தத்துவ நூல்கள், உலகத்தோற்றமும் அமைப்பும் இயக்கமும் பிறவும் பற்றியெல்லாம் ஆராயும் தன்மையுடையன,

சமய தத்துவ ஞானிகள், இவ்வாராய்ச்சியிற் பெரிதும் தலைப்பட்டு நுண்ணிய உண்மைகளைக் காண முயல்வர். மண் திணிந்த நிலமும், நிலன் ஏந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித்தலை இய தீயும், தீமுரணிய நீரும் ஆகிய ஐம்பெரும் பூதத்தியற்கையும் செயலும்பற்றி, நம் முன்னோர்கள் நுண்ணிதின் ஆராய்ந்து கண்டுணர்ந்திருக்கின்றனர். 'சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின் வகை தெரிவான் கட்டேயுலகு' என்பது திருக்குறள். இன்னோரனைய பலப்பல தத்துவ நுண்பொருள் ஆராய்ச்சிகளுக்குரிய அடிப்படை வித்துப்போல,

''நிலம்நீர் தீவளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்,
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்''

எனவரும் தொல்காப்பிய மரபியற் சூத்திரம் அமைந்திருத்தல், அறிஞர்கள் கருதியுணர்ந்து பெரிதும் மகிழத் தகுவதாகும்.

இந்தத் தொல்காப்பிய மரபியல் நூற்பாவினால், பண்டைத் தமிழ் மக்கள் சமய தத்துவ ஆராய்ச்சிகளில் தலைசிறந்து திகழ்ந்திருந்தமை புலனாகின்றது. ''மூன்றாம் பகுதி'', ''அறமுதலாகிய மும்முதற் பொருள்'' எனவரும் தொல்காப்பிய நூற்பாத் தொடர்களால், 'அறத்தாற் பொருள் ஈட்டிப் பொருளால் இன்பம் துய்த்து வாழ்தல் வேண்டும்' என்னும் உயரிய குறிக்கோள்நெறி, பண்டை தமிழ் மக்களாற் கடைபிடிக்கப் பெற்றமை தெற்றெனத் தெரிகின்றது. ''மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்'' என்பதனால், பண்டைய நம் தமிழ் மன்பதையில், (முக்காலமும் உணரவல்ல தக்கோர்கள்) திரிகாலஞானிகள் பலர், இருந்து வந்தமையும் புலப்படுகின்றது.

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

எனவரும் தொல்காப்பிய நூற்பாவால், அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் இயல்பு வாய்ந்த, நிறை மொழியையுடைய அருளாளர்களாகிய சமயநெறிச் சான்றோர்கள் பலர், வாழ்ந்து வந்தனர் என்பதும், தமிழ் மொழியின்கண் மந்திரங்கள் பல உண்டு என்பதும் பிறவும் விளங்குகின்றன.

(24) காட்டலாகாப் பொருள் :

தொல்காப்பியம் மொழிக்கு இலக்கணம் கூறும் நூலேயாயினும், அதன்கண் ஆங்காங்கே கடவுள் இலக்கணமும் அழகுற

நுட்பமாக அறிவுறுத்தப் பெற்றுள்ளது. "ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா, கற்பும் ஏரும் எழிலும் என்றா, சாயலும் நாணும் மடனும் என்றா, நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு, ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம், நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்டலாகாப் பொருள என்ப" எனவரும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா,

"அப்படியும் அந்நிறமும் அவ் வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக் காட்டொணாதே"

எனத் திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த திருமொழியின் பொருளை வலியுறுத்துதல் காணலாம். அன்பு, அறிவு, ஆற்றல், அருள் முதலிய பண்புகள் எங்ஙனம் நெஞ்சுகொளின் அல்லது காட்டலாகாப் பொருள்களாகத் திகழ்கின்றனவோ, அங்ஙனமே இறைவனும் இலங்குகிறான் என்பது, ஒப்புயர்வற்றதோர் அரும் பெறற் சமய தத்துவ உண்மையாகப் போற்றப்படுவதற்குரிய தொன்றன்றோ?

முடிவுரை :

இங்ஙனம் நுணுகி ஆராய்ந்தால், தொல்காப்பியம் என்னும் நம்முடைய பழம்பெருந் தமிழிலக்கண நூலின்கண், சமய தத்துவ நுண்பொருள்கள், பற்பல காணப்படுதலை யாவரும் உணரலாம். எனவே சமய வுண்மைகளும், தத்துவக் கருத்துக்களும், மிகவும் பிற் காலத்தில்,வேற்றவராலேயே, தமிழ் மக்களிடையிற் புகுத்தப்பெற் றன என்று ஒரு சிலர் கூறி வருவது உண்மைக்குப் புறம்பான தென்பதும் உயரிய சமயவுண்மைகளும், நுண்ணிய தத்துவக் கருத் துக்களும், மிகப் பழங்காலத்திலேயே தமிழ் மக்களிடையே நிலவி வந்தன என்பதும்; அவைகள் நம்முடைய தமிழினத்தின் நுண் மாண் நுழைபுலனையும், கலைநாகரிகப் பண்பாட்டு நலன்களையும் மலையிலக்கென விளக்கும் அரும்பெருஞ் சான்றுகளாம் என்பதும் பிறவும், ஐயுறவின்றித் தெளியப்படும்.

(வெண்பா)

நம்மருமைச் செந்தமிழின் நல்லமைப்பை ஆராய்ந்தால்,
செம்மைமிகு நற்றமிழர் சித்தாந்த –மெய்ம்மைகள்
எல்லாம் பொதிந்தொளிர்தல், யாரும் இனிதுணர்ந்து
நல்லோராய் வாழ்வர் நயந்து

- ந. ரா. முருகவேள்

FOOT-NOTES

(1) "As regards the age of Tholkappiem, I have investigated almost all the divergent views expressed by notable scholars and concluded that its composition could not have taken place later than 2500 B. C. That this assigoment of a Tamil work to so high an antiquity may not be deemed extravagant, when this is compared with the age of 4500 B. C., ascribed to the Rig Veda by such eminent oriental scholars and historians as prof Hermann Jacobi, Bala Gangadhar Tilak and Dr. Bloomfield"

—Maraimalai Adigal.

(2) ' Even a cursory glance of that ancient grammar Thol-kappiam, will convince that the grammatical terminology employed in it are the identical philosophical terminology necessary for dealing with the grammar of the phenomena of life. It in space of the alphabet, words and sentences treated in the grammar, Their corresponding mystic equivalents in philosophy are substituted, the Sutras or the rules of Thol-kappiam expound the phenomena of life instead of phenomena of the Tamil language".

—P V. Manickam Naicker,
(The Tamil Alphabet, Its Mystic Aspect)

(3) "Tamil grammarians designate vowels by a beautiful metaphor, as Uyir or life of a word ; consonants as Mey or the body ; and the junction of a vowel and consonant as Uyirmey or an animated body".

— Dr. Caldwell

(4) "The classification of nouns in Tamil is decidedly more philosophical ; for the difference between rational beings and beings or things which are destitute of reason is more mementous and essential than any difference that exists between the sexes".

— Dr. Robert Caldwell,
Comparative Grammar.

(5) "The philosophic meaning of the Sutra is distinct. The Karma does not transform with transmigration of souls but

remain intact and lies dormant waiting for the proper time according as the Karma is Akamiya or Prarathava or Samchitha".

—P. V. Manickam Naicker

(6) "At the very dawn of Tamilian civilization of which we catch a glimpse through the Tholkappiam, the oldest Tamil work extant,we find the views about God,soul and matter and salvation to have become throughly sound and complete.

As our knowledge of these facts deepens, as our ideas about their relations expand, we find the conclusions reached by our fore–fathers about their nature and relations,are daily receiving corroboration not only from the modern biological, geological and other scientific discoveries but also from the philosophical views worked out and held by such eminent thinkers as william James, Bergson, Lodge, ward and others".

— Maraimalai Adigal.

(7) "The recent developoments of western philosophy and physical science go every inch to prove the truth and value of all the fundamental doctrines that are peculier only to Saiva Siddhantha but not to any other religion or philosophy, ancient or morden ... The funamental and most important principles of the Saiva Siddhantha' bear close resemblance to morden Europen and American thought as developed by John Stuart Mill, James, Martineau, William James F.C.S.Schiller, James ward,Bergson, Eucken, Henry Drummond, James Sully and others".

''கணிதத்தைப் புறக்கணித்தால் விஞ்ஞானம் வளராது தெய்வத்தன்மையைப் புறக்கணித்தால் மனிதநேயம் வளராது. புலனடக்கத்தைப் புறக்கணித்தால் நோயற்றவாழ்வு வளராது. அவ்வாறே இலக்கணத்தைப் புறக்கணித்தால் கட்டுப்பாடும் ஒழுக்கமும் பண்பாடும் வளரமாட்டா மொழியிலக்கணம் என்பது நாட்டிற்கு அரணும் நதிக்குக் கரையும் போன்றதாகும்.''

மீன் வழிபாடு

இராஜ். பவுன்துரை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

முன்னுரை :

புராணக் கதைகள் மனிதனுடைய உணர்வை வெளிக் காட்டு வனவாக அமைந்துள்ளன. புராணங்கள் இந்தியாவில் மட்டுமன்றி உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் அம்மக்களுடைய பண் பாடு, மொழி, இவற்றின் தன்மைக்கு ஏற்ப அமைந்துள்ளன. பொதுவாகப் பல கடவுளரும் அவர் செயல், திறன் பற்றிய கதை களும் ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுக்காண வாய்ப்புடையனவாக உள் ளன. தொன்மையான பண்பாட்டையுடைய இந்தியா,எகிப்து, கிரேக்கம், பாபிலோனியா, சைபீரியா, சீனு, மெக்சிகோ போன்ற நாட்டின் புராணங்களில் இத்தன்மையைக் காணமுடிகின்றது. புராணங்களில் பலவகைத் தெய்வங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் 'மீன் வழிபாடு பற்றிய செய்திகள் பற்றி அறிய முயல லாம்.

புராணம் :

புராணம் என்பது பழமை என்ற பொருள் காட்டிப் பின் பழங் கதை என ஆகுபெயராக அமைகிறது என்பர். (1) தெய்வங்கள், இறைவழிபாடு முதலானவை பற்றிய மக்களின் எண்ணங்கள், நம்பிக்கைகள் வெளிப்படப் புராணங்கள் உதவுகின்றன. பொது வாகப் புராணம் பழமையின் சிறப்பைச் சுட்டுவதாகவே உள்ளது எனலாம். எனவேதான், ''பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த மக்களின் பொது வாழ்வையும் அவர்கள் கொண்ட உணர்வின் அடிப்படையையும் காட்டின என்பர் (2)

விலங்கு வழிபாடு

ஆசியா ஐரோப்பிய புராணங்களில் பறவை, பாம்பு, மீன், முதலை பற்றிய செய்திகள் அதிகம் காணப்படுகின்றன. புராணங்களில் காணப்படும் இவ்விலங்குகளின் படைப்புக்கள் பலவகையாக உருவகப்படுத்தப்படுகின்றன. இத்தகு விலங்கின வழிபாடு முறை இன்றும் காணமுடிகின்றது இதற்கு, மிருகங்கள் பற்றிய புராண இதிகாசக் கருத்துக்களைக் கொண்டே மிருகங் களை வணங்குகின்றார்கள் என்றும் கூறுவர்.(3) அப்படியாயின் விலங்கினங்களை ஏன் வணங்கத் தொடங்கினார்கள் எனும் வினா எழுகின்றது. விலங்கினங்களை வணங்கும் முறையை இயற்கை வழிபாடு முறையோடு இணைத்துக் காண்பின் எது முதலில் தோன்றியது எனும் வினாவும் எழுகின்றது.

இயற்கை வழிபாடு முதலில் தோன்றியதா? அல்லது விலங்கு வழிபாடு முதலில் தோன்றியதா? என்பதில் ஆராய்ச்சியாளர்கள் கருத்து வேறுபாடு உடையவராக காணப்படுகின்றனர். இருப்பினும் விலங்கு வழிபாடே முதன்மையானது என்றும் அதிலிருந்து தோன்றியதே இயற்கை வழிபாடு என்றும் கூறுகின்றனர் (4)

பொதுவாக ஆவி, மறுபிறவி போன்ற சிந்தனைகளின் காரணமே இவ்விலங்கு இன வழிபாட்டிற்குக் காரணம் எனலாம். இறந்தபின்னர் நமக்கு கிடைப்பது மீன் பிறவிதான் என்றும், மறுபிறவி எடுத்தால் அது 'மீன்' வாழ்வு தான் எனும் நம்பிக்கையுடைய செய்திகளைக் காணமுடிகின்றது. (5) அவ்வாறாயின், இவ்வழிபாடு ''இனக்குழு வழிபாடு'' வகையினைச் சார்ந்தவையா? எனும் கேள்வி எழுகின்றது. இனக்குழு குறி வழிபாடு என்பது: 'மக்களினம் எந்த விலங்குகளிலிருந்து தோன்றியதோ அந்த இனமரபுச் சின்னமாக உள்ள மிருகங்களை வழிபடுவது. பொதுவாக இனக்குழு குறியீடாக (Totemism) விலங்குகள் அல்லது தாவரங்கள் இருக்கும். (6) மானிடவியல் ஆய்வாளர் டெய்லரின் கருத்துப்படி, ''இவ்வழிபாடு சமய வழிபாட்டின் ஒரு வடிவமாகக் காட்சியளிக்கின்றது'' எனப்படும்? இருப்பினும், மரத்தையோ விலங்கையோ தங்கள் இனத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகக் கொண்ட நம்பிக்கையே இவ்வழிபாட்டுக்குக் காரணமாக இருக்கும் என்று கருதலாம்.

மர வழிபாடு :

மரவழிபாடு பற்றிப் பரிபாடல்,

விடையரை யசைத்த வேலன் கடிமரம்
பரவினருரையொடு பண்ணிய விசையினர்"

(17 : 3-4)

எனக் குறிப்பிடும். மரத்தை வழிபடுவதும், சங்ககாலத்தில் மரங்களே இறைவன் உறையும் இடங்களாகவும் வழிபடப்பட்டனர் என்பதை,

கடவுள் ஆலத்து	—	நற். 343 : புறம். 199.
கடவுள் மரத்த	—	அகம் 270.
தெய்வஞ்சேர்ந்த பராரை வேம்பு	—	அகம். 309.
கடவுள் வாகை	—	பதிற். 55.

எனும் தொடர்கள் இதனை வலியுறுத்தும், எனவே மர வழிபாடும் மக்களிடம் செல்வாக்குடையதாக இருந்துள்ளமையை அறிய முடிகின்றது.

'மீன்' பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன. மீனும் ஒரு இனக்குழுக் குறியீடாகக் கூறப்படுகிறது (புறம், 99 : 7-8). சேர சோழ. பாண்டிய மன்னர்களின் கொடிகளில் அமைந்துள்ள வில் புலி, மீன் போன்றவைகளும் இனக்குழுக் குறியீட்டுச் சின்னங் களாகக் கருதப்படுகின்றன. சங்க இலக்கியத்தில் இனக்குழுக் குறி யீட்டின் சின்னம்'பொறி' என்று குறிப்பிட்டுள்ளது (புறம்.39:14-16, 15 : 29-31) கொடிகளிலும் இனக்குழுக் குறியீட்டின் சின்னங்கள் வரையப்பட்டுள்ளன என்பதைப் புறம்.56: 4-6; திரு.முருகு 389, 219, 227 கூற்றாலும் அறியமுடிகின்றது.

சிந்துவெளியில் மீன் சின்னம் கிடைக்கப் பெற்றுள்ளது இந்த கிடைத்த குறியீடுகளை ஆய்ந்தவற்றில் ''செம்மீன் உடைய கோயிலைச்" சுட்டுவதாக உள்ளன எனப் பின்னிஷ் ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பிடுகின்றனர். சிந்துவெளி மக்கள் நீரைத் தெய்வமாகப் போற்றினார்கள் என்று ஜான்மார்ஷல் குறிப்பிடு கின்றார். (8) தமிழர்களும் நீரைத் தெய்வமாகப் பாவித்தனர். புதுப் புனலைப் புனித நீராய்க் கருதி நீராடுதலை சங்க இலக்கியம் காட்டும். நீர் புனிதமான ஒன்று என்பது இந்து மதத்தின் பொது வான கருத்தாகும். இதனையே தீர்த்தம் என்றும் அழைத்தனர். நீரைப் புனிதமாகக் கருதக் கூடிய பண்பு திராவிடருடையதாகும். அதனை சிந்துவெளி நாகரிகத்திலும் காணலாம்.

'நீர் அடக்கம்' (Water burials) எனும் இறந்தோர் சடங்கை சிவப்பு இந்தியர்கள் (Red Indians) நடத்தினர்.(8) நீர் அடக்கம் என்பது இறந்தோரை ஆற்றுநீர், கடல்நீர். போன்றவற்றில் போட்டுவிடுவர். இப்பழக்கம் இவர்களிடம் அறியமுடிகின்றது. இந்தியாவில் இத்தகைய பழக்கம் இருந்ததாக அறிய சான்றுகள் இல்லை எனலாம். நீர் அடக்கம் செய்தால் அவர்களுடைய பாவம் நீங்கும் என்றும் இறைவனை அடைய இதுவே சிறந்த மார்க்கம் என்றும் கருதினர். ஆனால் இறந்தோர் அஸ்தியை நீரில் கரைப் பது இன்றும் உள்ள வழக்கமாகும்.

புராணங்களும் மீன் வழிபாடும் :

கடற்பிறந்த கோதையெனத் திருமகளை அழைப்பர், இதனை

மாக்கடற் பிறந்த கோதை
மாவரிப் பரியை செய்யாள்

என்று சூடாமணி நிகண்டு காட்டுகின்றது.

திருமாலின் அவதாரங்களுள் ஒன்று மீன் வடிவமாகும். புராணங்களில் திருமால் மீன் வடிவம் கொண்டு மனுமுன் தோன்றியதாகக் கதை கூறப்படுகின்றது. ஆனால் மகா பாரதத்தில் பிரமன் மீன் வடிவம் மேற்கொண்டு மனுமுன் தோன்றியதாகக் கூறப்படுகிறது. கதை எப்படியிருப்பினும் இவ் வுலகத் தோற்றத்துடன் மீன் பற்றிய செய்தியைக் காண முடிகின்றது. பிரமனின் சின்னமாகவும், காமதேவனின் சின்ன மாகவும் மீன் உள்ளது.

வருணன் மீனவர்கள் வணங்கும் தெய்வமாகக் குறிக்கப் படுகின்றான். வருணன் நீர்வடிவமுடையோன், நீர்நிலைகளின் அதிபதி, நீர்க் கூந்தலை உடையவன் என அழைக்கப் படுகின்றான். (10) வருணனின் மனைவி வருணி கடற் றெய்வமாகக் கூறப்படுகின்றாள். 'மணிமேகலை' எனும் கடற் றெய்வம் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்றது. மீன் (சுறா) முள்ளை நட்டு வணங்கிய செய்தியும் காணமுடிகின்றது.

தொல்காப்பியர் திணை நிலத் தெய்வங்களைச் சுட்டுமிடத்து,

வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே

(அகத்திணை, 5)

என வருணனைக் கூறுகின்றார். தமிழிலும் ஆரிய மொழியிலும் வருணன் எனும் பெயர் காணப்படுகின்றது. ஆனால் கோஷ் என்பவர், ''ஆரியர்கள் மேற்காசியாவிலிருந்து இதனைப் பெற்றனரோ என ஐயம் எழுகிறது'' என்கிறார் ஆனால் தமிழர் தெய்வங்களில் வருணன் தொன்மையான தெய்வங்களில் ஒருவனாக இருந்துள்ளான்.

தமிழ்நாட்டில் இன்றும் சில பகுதிகளில் மீன்வழிபாடு பற்றிய செய்திகளை அறியமுடிகின்றது. 'வேடன்' எனும் ஒருவகை மீன் தெய்வமாகச் சுட்டப்படுகின்றது. இதனை வலையில் பிடிப்பதோ, உண்ணும் வழக்கமோ மீனவர்களிடம் காணப்படவில்லை. இந்த வேடன் சின்னகுட்டியாண்டவரின் மறு வடிவமாகக் கருதப் படுகிறது. குட்டியாண்டவர் மீனவர்கள் வணங்கும் சிறு தெய்வங் களில் ஒன்று.தென்னார்க்காடு மாவட்டத்தில் இதனைக்காண முடி கின்றது. பங்குனித்திங்கள் இறுதியில் மேலைக்காற்று அடிக்கத்

துவங்கும் போது, மேற்கொள்ளப்படும் கோலா மீன் பிடிப்புத் தொழிலைத் தொடங்குவதற்குக் குட்டியாண்டவரை வழிபட்டு அனுமதி பெற்றுச்செல்வது இன்றளவும் வழக்கில் உள்ளது.

'பனவா' எனும் ஒருவகை மீன் 'பெரிய குட்டியாண்டவரின்' பிறிதொரு வடிவமாகக் கருதப்படுகிறது. வேடன், பனவா ஆகிய இரண்டும் குட்டியாண்டவரின் வடிவங்களாகவேக் கருதி வணங்குகின்றனர்.

கிரேக்கர்கள் மறுபிறவி மீது நம்பிக்கை கொண்டவர்கள். மறுபிறவி எடுக்கும் ஆன்மாவானது மீன்வடிவம் எடுக்கும் என்று நம்பினார்கள். 'பீன்' (Bean) எனும் பெண் தெய்வம் மீன் வடிவம் கொண்டது எனக்கிரேக்கர்களுடைய புராணம் கூறுகின்றது (12) இக்திஸ் (Ichthys) எனும் தெய்வம் மீன் தெய்வம் என்றும்; அவன் 'அஸ்ரேட்' எனும் தெய்வத்தின் மகன் என்றும் இவர்களுடைய புராணம் கூறுகின்றது (13) இக்திஸ் தெய்வம்தான் பின்னர் ஏசுவாகத் தோன்றியது என்று கூறும் புராணக்கதையும் உண்டு. இக்திஸ் என்பதற்குப் பொருள்'மீன்'என்பதாலும் இக்திஸ் தெய்வம் தான் பின்னர் ஏசுவாகத் தோன்றினார் என்பதாலும், ஏசுவின் சின்னம் 'மீன்' என்று சுட்டப்படுகிறது (14) மேரி மாதாவை மீனுடன் கற்பித்துக் கூறுவதாலும்,பீட்டர் "The Fisher of Men" (15) என்று அழைக்கப்படுவதாலும் ஏசுவின் சின்னமாக மீன் குறிப்பிடப்படுகின்றது

கிரேக்கர்கள் மீனை 'வாழ்வின் மாயக்கப்பல்" (The Mystic ship of life) என்று குறிப்பிடுகின்றனர் (16) டைபோஸ் வீனஸ் (Typhoeus Venus) (Olympian Gods) மீன்களாக மாறிவிடுகின்றன. அம்மீன்கள் அப்ரோடைட் (Aphrodite) எனும் கிரேக்கத் தெய்வத்துடன் தொடர்புடையனவாகவும் உள்ளன. (17) பல்வகை மீன்களில் 'அப்ரோடைட்' ஒருவகை மீனாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்நிலை 'செழுமைக் கடவுள்' என்று போற்றிப் புகழப்படுகின்ற 'இஸ்தர்' (Ishtar) எனும் பெண்தெய்வமும் மீன் தொடர்புடையதாக அமைகின்றது(18) இஸ்தர் தெய்வத்தின் அடையாளமாக மீன் குறிக்கப்பெறுகிறது. இத்தெய்வம் இருக்குமிடத்தில் மீன் இருக்கும் என்றும், மீன் இருக்கும் இடத்தில் செழுமையிருக்கும் என்றும் நம்பினர்.

பாபிலோனியப் புராணக்கதைகளில் வரும் 'ஓனஸ்' Oanness எனும் தெய்வம் மீன் தெய்வமாகும். ஓனஸ் செழுமைக்கடவுளாக

வும், உழவர்களின் தெய்வமாகவும் உள்ளது. 'டாச்கன்' எனும் தெய்வத்தை ஓனஸ் தெய்வம் போன்றே மீன் தெய்வங்களில் ஒன்றாகக் கருதுகின்றனர்(19) யாவெப் (Yahwep) எனும் சூரிய ஒளித் தெய்வத்தின் குறியீடாக மீன் கற்பிக்கப்படுகிறன்து.

மீனவ அரசன்

''டாமஸ்" (Tammuz) எனும் தெய்வம் 'மீனவ அரசனாக'க் கிரெயில் புராணத்தில் சொல்லப்படுகிறது. அவ்வாறு 'மேசையா' (Masslah) எனும் யூதர்களுடைய தெய்வமானது மீனவ அரசனாகக் கருதப்படுகின்றது. மீனவ அரசனாக மீன் தெய்வத்தைக் கூறுவது, இனக்குழுக் குறியீட்டு முறையுடன் தொடர்புடையதாக அமைகின்றது எனலாம். ஒரு இனக்குழு முதலில் ஒரு விலங்கினத்தைச் சார்ந்த அல்லது தாவர இனத்தைச் சார்ந்த ஒன்றைக் குழுக் குறியீடாக அமைத்துப், பின்னர் காலப் போக்கில் அவற்றைப் போற்றி வணங்கத் தொடங்கினர் என்பதையும் அறிய முடிகின்றது. டாமஸ், மேசையா போன்ற தெய்வங்ளும் இனக் குழுக் குறியீட்டின் தொடர்புடையனவாக இருக்கலாம்.

தத்துவக் குறியீடு :

மீன், தெய்வங்களின் சின்னமாகவும் குறியீடாகவும் காணப்படுகின்றது. பொதுவாக சமய, தத்துவத் தொடர்புடையதாக உள்ளது தத்துவநோக்கில் மீனின் வால் பகுதியினைச் சூரிய ஒளியாகவும் அதன் ஆற்றலைக் குறிக்கும் குறியீடாகவும் சுட்டுகின்றனர். நீந்தும் மீன்கள் இறையாற்றலுடையன வென்றும், வெள்ளத்தின் குறியீடாகவும் எகிப்தியர்கள் கருதுகின்றனர். 'Phallic'—ன் குறியீடாகவும் மீன் உள்ளது

கடற்றெய்வம் :

மனிதனையும் விலங்கினையும் இணைத்துக் காணும் பாங்கு ஓவியம், கலை ஆகிய துறைகளில் அதிகம் காணப்படுகின்றது. கடல் தொடர்புடைய பல படைப்புகளையும் அறியமுடிகின்றது. கடற்பசு, கடற்குதிரை, கடற்சிங்கம், கடல்யானை, கடல்நாய் என்றெல்லாம் கற்பனையுடன் தொடர்பு படுத்தியும் கூறப்படுகின்றன.

குறிப்பாகக் கடற்கன்னியை நாம் கூறலாம். இத்தெய்வம் ஆடவும், பாடவும், ஆற்றலுடையதாகக் கூறப்படுகின்றது. பாபிலோனியரின் ஓனஸ் தெய்வமும், சிரியாவின் கடற்கன்னி தெய்வமும் இவ்வாறே கூறப்படுகின்றன.

வெள்ளம் — மீன் — வீரன் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்ட தெய்வமாக நோவா (Noah) எனும் தெய்வம் சுட்டப்படுகிறது. அப்ரோடைட் தெய்வமும் கடற் றெய்வமாகக் காணமுடிகிறது. (22)

ஐரோப்பாவின் தெய்விக வளர்ச்சிக்கு முக்கிய கருத்தாய் அமைவது ஐஸ்லாந்தின் புராணங்களே என்பர். ஐஸ்லாந்து புராணத்தில் கடற்பயணக் கடவுளாக 'நியோர்டு' இருந்ததாகக் கூறப்படுகின்றது. நியோர்டு தெய்வத்திற்கு இரண்டு குழந்தைகள் இருந்தன என்றும், அந்த இரண்டு குழந்தைகளையும் தெய்வங்களாகவும் வணங்கினர் என்றும் குறிக்கப்படுகின்றது. 'ஃப்ரேய்' எனும் குழந்தைத் தெய்வத்தை அன்புக் கடவுளாகவும் வணங்கினர் என்றும் ஃப்ரேஜா எனும் குழந்தைத் தெய்வத்தைச் செழுமைக் கடவுளாகவும் வணங்கினர் என்றும் கூறப்படுகின்றது. (23)

புனித மார்க்கெர்ட் ஆசியாமைனரிலிருந்து கடல்வழி வந்து சேர்ந்த கதையில் 'கடற்கன்னி' உதவியதாக சொல்லப்படுகின்றது. சிரியா நாட்டின் புராணக் கதைகளில் அட்ரகேட்டிஸ் (Atragatis) எனும் தெய்வம் காணப்படுகின்றது. (24) அட்ரகேட்டிஸ் கடற்றெய்வமாகவும் வணங்கப்படுகின்றது பொதுவாகக் கடற்கன்னியுடன் இசையும் பாடலும் தொடர்புபடுத்திக் காட்டப்படுகின்றன. கடற் பயணத்தின்போது ஆடற் றெய்வத்தினை வேண்டி இசையும் பாடலும் எழுப்புவர். இதனை ஒரு வழிபாட்டு முறையாகக் கருதியிருக்கலாம்.

மகரயாழ்

கடற் பயணத்தின்போது இப்பொழுதும் மீனவர்கள் பாட்டுப் பாடுவதை அறிகின்றோம். இசையும் பாடலும் அவர்களுடைய பயத்தையும் களைப்பினையும் போக்கும் என்பதால் இது இருந்திருக்கக் கூடும். யவனர்களுடைய தொடர்பால் தமிழகத்திற்கு மகரயாழ் எனும் இசைக்கருவி கிடைத்தது. பல்வகை யாழ்களில் மகரயாழ் ஒன்று. மீன் வடிவம் கொண்டமையால் இதனை மகரயாழ் என்பர்.

"தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
மகரயாழின் வான்கோடு தழீஇ" (25)

எனும் மணிமேகலைத் தொடர்.

"யாணர்க் கூட்டத்தியவனக் கைவினை
மானப் புணர்ந்ததோர் மகர வீணை" (25)

எனும் பெருங்கதைக் குறிப்பு மகரயாழ் இருந்தமையை அறியலாம் அது யவனர்கள் தொடர்பால் கிடைத்தகருவியென்றும் கூறுவர்.(27)

கிரேக்கர்களுடைய புராணக் கதையில் ஒசிரிஸ் எனும் தெய்வம் குறிக்கப்படுகிறது. ஒசிரிஸ் குடும்பத்தினைச் சார்ந்த 'இசிஸ்' எனும் தெய்வம் நீந்தும் மீன் தெய்வமாக வருணிக்கப்படுகிறது. இசிஸ் எனும் கடற் றெய்வம் இசை எழுப்பும் இசைதெய்வம் என்றும் அவ்விசையானது தெய்வீகத் தன்மையுடையது என்றும் நம்பினர். அது கடற்பயணிகளுக்கு உற்சாகத்தைக் கொடுக்க வல்லது என்பர். பொதுவாக கிரேக்கர்களின் கடற்பயணங்களில் இசையும் பாடலும் இடம்பெறும். இச் சிறப்புக் கருதி யாழுக்கு மீன் வடிவத்தை கொண்ட 'மகரயாழ்' வடிவம் அமைத்தனர் எனலாம். கடல் பயணங்களில் அதிகமாகப் பாடல் இடம் பெறுவதும் ; மீன் தெய்வங்களுடன் இசையைத் தொடர்புபடுத்திக் காண்பதும் இங்கு ஒப்பிட்டுக் காணவேண்டிய ஒன்றாகும்.

இராட்சத மீன் :

சீனர்களின் பௌத்த நூல்கள் ஐந்து வகையான ராட்சத உருவங்களை (Dragons) குறிக்கின்றன. (28) அவை : ராட்சதப்பாம்பு (Serpent-Dragon), ராட்சதப் பல்லி (Lizard-Dragon), ராட்சத மீன் (Fish-Dragon), ராட்சத யானை (Elephant-Dragon) ராட்சத தேரை (Toad-Dragon) என்பன. இவற்றில் ஒன்று 'ராட்சத மீன்'. சூடாமணி நிகண்டு,

கலைசுறா மீனே றென் பகரப்படிய மகரமாகும்
செலவுறு யானை மீனே திமிபெருமீனமாம்
அலைவுறு திமிங்கலப் பேரானையை விழுங்குமீனாம்
மலைவுறு திமிங்கிலந்தான் மற்றதை விழுங்கு மீனே

எனப் பல்வகை ராட்சத மீன்களைக் குறிப்பிடுகின்றது.

பால் வழங்கும் தெய்வம் :

எகிப்து, லிபியா புராணங்களில் நீத் (Neith) எனும் தாய்த் தெய்வம் பால் வழங்கும் மீன் குடும்பத்தைச் சார்ந்த தெய்வமாகக் குறிக்கப்படுகின்றது. இத் தெய்வத்திற்கு இரு முதலைக் குட்டிகள் குழந்தைகளாக உள்ளன. (29)

மெக்சிகன் புராணத்தில் 'மாயுவல்' (Mayauel) எனும் தெய்வ மானது உயிர்ப்பிராணிகளுக்குப் பால் வழங்கும் தெய்வமாகவும் மீன் வளர்க்கும் பாலூட்டியாகவும் உள்ளது. மாயுவல் போல

ஆர்டிமிஸ் எனும் மீன் தெய்வம் குறிப்பிடப்படுகிறது ஜப்பானியர் வணங்கும் தெய்வங்களிலும் மீன் உருவத்தைக் கொண்ட தெய்வத்தைக் காணலாம். (30)

சைபீரியர்களுடைய புராணத்தில் ஆர்டிமிஸ் வடிவம் ஒத்த மீன் உருவத்தெய்வம் காணப்படுகிறது. 'பாசிரிக்' எனும் சைபீரிய மக்களிடம் மீன் வடிவத்தைப் பச்சைக் குத்திக் கொள்ளும் பழக்கம் காணப்படுகின்றது.(31) இனக்குழுக் குறியீட்டைக் காட்டும் விதங்களில் பச்சைக் குத்திக் கொள்ளுதல் ஒரு முறையாகும். எனவே சைபீரிய மக்களிடத்திலும் மீன் இனக்குழுக் குறியீடாக இருந்தது எனலாம்.

டையோனிஷியன் Dionysian) பண்பாட்டில் 'ஸால்மன்' (Salmon) எனும் மீனைத் தெய்வத்தன்மை கொண்டதாகக் கருதுகின்றனர். மாதவிடாய்க் காலத்தில் இவ்வினப் பெண்கள் சிறு ஓடைகளைத் தாண்டவோ, கடலருகே செல்லவோ கூடாது. ஏனென்றால் ஸால்மன் வகை மீன்கள் கோபட்பட்டுவிடும். அதனால் உடலுக்கும் உயிருக்கும் ஆபத்து என்றே கருதி வந்தார்கள். (32)

பாண்டியனை 'மீனவன்' என்று அழைப்பர். மீன் கொடியைக் கொண்டமையால் மீனவன் என்று அழைக்கப்பட்டான். பாண்டியனுடைய கலைப் படைப்புகளில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும். பாண்டிய நாட்டுக் கோயில்களில் இதனைக் காணலாம். கலிங்கத்துப் பரணியில்,

காரிரும்பின் மகரதோ
ரணமாகக் கரும் பேய்கள்
ஓரிரண்டு கானாட்டி
ஓரிரும்பை மிசைவளைத்தே

(கலிங் 105)

எனும் தொடரில்,பேய்கள் கோயிலின் வாசலுக்கு எதிரில் இரும்புத் தூண்களை நட்டு அவைகளின் மேல் ஓர் இரும்பை மகர தோரணமாக வளைத்து வைத்த காட்சியினைக் காட்டுகின்றது மகர தோரணம் என்பது 'மகர வடிவமைத்த ஓர் அலங்காரத் தொங்கல்' எனப் பொருள்படும். எனவே கோயிலின் வாயில்களில் மகர தோரணங்களை அமைத்த செய்தியினை அறியமுடிகின்றது தமிழ்நாட்டில் காணப்படும் மீன் வடிவம் போன்று இந்தோனேசியாவில் பல கோயில்களில் மீன் வடிவம் காணப்படுகின்றது.

மீன் வழிபாடு உலகின் பல நாடுகளிலும் இருந்தமையை புராணங்கள் வழியாக அறியமுடிகின்றது. மீன் இனக்குழுக் குறியீடாகவும்,கலை,கட்டிடக்கலை எனக் கலைப் படைப்புகளிலும் உள்ளது. மன்னர்களின் சின்னமாகக் கொடி, நாணயங்கள் போன்றவற்றில் மீன் உருவம் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே மீன் வழிபாடு தொன்றுதொட்டு வருகின்ற ஒரு முறையாகவே காணப்படுகின்றது. பொதுவாக நீரை வணங்கும்போதும், நீரின் சிறப்பைச் சுட்டுமிடத்தும் மீன்பற்றிய சிந்தனை குறிக்கப் படுகின்றது. கடற்பயணம் செய்வோரின் முக்கிய வழிபாடாக உள்ளது. எனவே, இது வழிபாட்டு தெய்வமாகவும், இனக்குழுக் குறியீடாகவும், சின்னமாகவும் உள்ளது. மீன் வழிபாடு பற்றிய புராணச் செய்திகளை ஆய்வு செய்தால் இன்னும் பல செய்திகள் கிடைக்கும்.

அடிக்குறிப்புகள் :

1. டாக்டர் தா. வே. வீராசாமி (பதி.) தந்திவனப் புராணம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், (சென்னை, 1981), ப.7.
2. மேற்படி, ப. 1.
3. வி. கே. கணேசலிங்கம், மிருகங்களும் தமிழர் வழிபாட்டு முறையும்.
4. Emile Durkhein, Elementary Forms of Religious Life, P. 48.
5. J. E. Cirlot, A Dictionary of Symbols, Philosophical Library, (New York, 1962), P. 190.
6. Debiprasad Chattopidhyaya, Lokayata, Peoples Publishing House, 1973, (3rd Ed.), PP. 87–9.
7. E. B. Taylor, Primitive Culture, Vol. I, P. 402.
8. Rev. Father. Heross, Studies in Proto - Indo - Mediterranian Culture, P. 210.
9. Donald A. Mackenzie, Myths of Pre – Columbian America, The Grahm Publishing Company Ltd , P. 128.
10. John Dowson, A Classical Dictionary of Hindu Mythology and Religion etc., Manu Publications, New Delhi' 1978, P. 338.
11. அ. மு. பரமசிவானந்தம், வரலாற்றுக்கு முன் வடக்கும் தெற்கும், 1961, ப. 101.

12. Ad de Urles, Dictionary of Symbols and Imagery, North Holland Publishing Company, London, 1974. P. 189.

13 Ibid. P. 189.

14. Ibid P. 189.

15. Ibid. P 190.

16. J. E. Cirlot, A Dictionary of Symbold, Philosophical Library, New York, 1962, P. 102.

17. Ibid. P. 102.

18. Ibid. P 102.

19. Ad de Uries, Dictionary of Symbold and Imagery, North-Holland Publishing Company, London, P. 190.

20. Ibid. P. 189

21. Donald A Mackeozie, Myths of Pre-Columbian America, The Grashom Publishing Company Ltd., P. 132.

22. Donald A. Mackeazie, Mythys of Pre-Columbian America, The Grashom Publishing Company Ltd., P.173

23. இராஜ். பவுன்துரை, உலகப் புராணங்களின் ஒற்றுமை, இ. ப க. மலர், 1979.

24. Donald A. Mackenzie, Mythys of Pre-Columbian America, P. 185.

25. மணிமேகலை, 55 – 58.

26. பெருங்கதை, 3 : 15 : 22–23.

27. விபுலானந்த சுவாமிகள், யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர், 1947, ப. 49.

28. Dr. M. W. Devisser, The Dragon in China and Japan, Amsterdam, 1913, P P. 5, 7, 13.

29. Faraell, Cults of the Greek States, Vol II, P. 522.

30. Budge, The Gods of the Egyptians, Vol I, P. 32. Donald A. Mackeozie, Myths of the Pre-Columbian America, The Grashom Publishing Company Ltd., P. 173.

31. யுனெஸ்கோ கூரியர், பிப். 1977, ப 9.

32. ருத்பெனிடிக்ட், பண்பாட்டுக் கோலங்கள், தமிழ் வெளியீட்டுக் கழகம், 1964, ப. 185.

தமிழரின் தொல்வனப்புகள்

புலவர். பொன். முனியப்பன், எம். ஏ.,
கூகலூர்—638 313

1.0 முகிழ்ப்புரை

1.1 இனிய இத்தமிழ் நிலம் மிகத் தொன்மையும் பழமையும் வாய்ந்தது. உயிரினங்கள் சிறந்து தோன்றி நன்கு உருப்பெற்ற இடமான குமரிக்கண்டமே தமிழரின் தாய்நிலம்—பிறப்பிடம். குமரிக்கண்டத்தில் வாழ்ந்த குளிர் தமிழ் வேந்தர்கள் ஆற்றிய அருப்பெருஞ் செயல்களே தமிழர்களின் தொல்வனப்புகளாய்த் தூய வரலாருய்த் துவங்குவது.

2.0 இப்படி நடந்தவைகள்

2.1 இன்றைக்கு இந்நாட்டின் 'இதிகாசங்களாய்' இயம்பப் படுபவை தமிழர்களுக்கு உரிய அல்ல. வடபுலத்திற்கு மட்டுமே உரியவை. இதிகாசம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு 'இப்படி நடந்தது' என்பதே பொருள். 'இப்படி நடந்தது' எனத் தமிழர்கள் சொல்லிக் கொள்ளத்தக்க வரலாறு பாண்டவர் வரலாறோ இராமனின் வரலாறோ அல்ல.

3.0 தமிழின் தொல்வனப்புகள்

3.1 பண்டைப் பாண்டியர்களின் வரலாறே அப்பாங்கினைப் பெறும் பண்புடையது. குமரிக்கண்டத்தில் கொலுவீற்றிருந்து குளிர் நிழல்தந்து குடிகளைக் காத்த கொற்றவர்களின் வெற்றி மிக்க ஆற்றலைப் பேசுவதே தமிழர்களின தொல்வனப்பாய்த் துலங்கமுடியும்.

3.2 அத்தகைய அரும்பெரும் ஆற்றல்மிகு வரலாற்றை உணர்த்தும் தொல்வனப்புகள் தமிழில் இருந்தன. அத்தொல் வனப்புகள் இன்று இவ்வுலகில் திகழும் பல்வேறு தொல் வனப்புகளைப் போன்ற கற்பனை கலந்த வரலாறுமன்று; கவிதையு மன்று.

4.0 தரைச்செலவும் கடற்செலவும்

4.1 உலகின் வரலாற்றையே உரைக்கும் ஒப்புயர்வற்ற உண்மை வரலாருகத் திகழ்ந்தது அது. அக்கால இந்நிலவுலகின் அரிய தன்மைகளையெல்லாம் அறியக் காட்டுவதாய் விளங்கியது.

கடலும் மலைகளும் கவின்மிகு நிலங்களும் கலந்து மயங்கிக் கிடந்த காட்சிகளைக் கட்டுரைத்துக் காட்டுவது.

4.2 இவ்வினிய ஏற்றமிகு தமிழ்த் தொல்வனப்புகளின் பெயரே "செங்கோன் தரைச்செலவு" 'நெடியோன் கடற்செலவு' என்பன. அன்றைய உலகின் சிறந்த செய்திகளையெல்லாம் செப்பமுறத் தந்த இந்தத் தமிழின் தொல்வனப்புகள் எவ்வண்ணம் தோன்றியது என்னும் சீரிய வரலாற்றைச் சிறிது நோக்குவோம்.

5.0 நெடியோனும் செங்கோனும்

5.1 பஃறுளி ஆற்றின் கரையில் அமைந்த பண்டைய குமரிக் கண்ட மதுரையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவர்கள், பாண்டியர்கள். அப்பாண்டியரில் ஓர் அருந்திறல் மன்னனாய்த் திகழ்ந்தவன் பாண்டியன் நெடியோன், இப்பாண்டியனின் படைத் தலைவனாயும் குமரிக் கண்ட நிலைப்பகுதி ஒன்றின் தலைவனாயும் திகழ்ந்தவன் செங்கோன்.

5.2 தமிழர்களால், மக்களின் வாழ்க்கை அமைப்பு அகம் புறம் என இரு கூறுக வகுக்கப்பட்டன. இதில் அக்காலத் தமிழரின் புறவாழ்க்கை பற்றிக் கூறும் புறநானூற்றின் வழியும், அருந்தமிழ் உரையாசிரியர்களின் வழியும் மேற்குறித்த செய்திகளை அறிய முடிகிறது.

6.0 பனியூழிக் காலம்

6.1 இன்றைய புவியியல் அறிஞர்களின் புகழ் வாய்ந்த ஆய்வு களால் இவ்வுலகில் பனியூழிக்காலம் இருந்தது என்பதை அறிகின்றோம். அப்பனியூழிக்காலத்தில் பெரும் பெரும் மலைகளாக இருந்த பனி உருகி நீராயிற்று. அந்நீரால் கடல்மட்டம் சிறிது சிறிதாக உயர்ந்து வந்தது.

7.0 இயற்கையை வெல்வது எப்படி

7.1 இக்காட்சியை அன்று குமரிக் கண்டத்தை ஆண்ட பாண்டியன் நெடியோனும் செங்கோனும் கண்டார்கள். குமரிக் கண்டத்தைக் சூழ்ந்திருந்த கடல் நி அந்நிலத்தைச் சிறிது சிறிதாக விழுங்குவதைக் கண்டு அவலமுற்றார்கள். அந்த அவலத்திலேயே ஆழ்ந்து விடாமல் அத்துன்ப நிலைகண்டு அயர்ந்து விடாமல் அதனை நீக்கும் மாற்று வழிகாண முயன்றனர்.

7.2 தகுந்த நிலவியல், கடலியல், வானியல் வல்லுநர்களைக் கூட்டி ஆய்ந்தார்கள். அழிந்த அரும்பெரும் நூல்கள் போக

இக்காலத்திருக்கும் இலக்கியங்களைக் கண்டாலே இத்தகுபல்துறை வல்லுநர்கள் அக்காலத்துக் குமரிக் கண்டத்தில் இருந்தனர் என்பதை அறியலாம்.

8.0 வல்லுநர்களின் கணிப்பு

8.1 அவ் வல்லுநர்களின் அரிய கணிப்பின்படி குமரிக் கண்ட நிலப்பகுதி முழுமையும் கடலால் மூழ்கிவிடும். ஆயின் அது உடனடியாக நிகழாது. சில ஆண்டுகள் ஆகும். எனவே அக்கால இடைவெளிக்குள் குமரிக் கண்ட மக்கள் அவ்விடத்தினின்றும் உலகின் பிற இடங்களுக்குப் பெயர்ந்து செல்வதொன்றே வழி எனக் கணித்தனர்.

9.0 பிறந்த இடம்விட்டுப் பிரிவதா ?

9.1 உயிர்கள் தோன்றியது முதல் உயர்ந்த மீமிசை நாகரிகத்தையும் பண்பாட்டையும் உருவாக்கிய நிலத்தை விட்டுப் பிரிந்து செல்வதா ? என அக்குமரிக் கண்ட தமிழ்மக்கள் எல்லாம் உள்ளங் குமுறினர். இதனை வெல்ல எந்த வழியும் இல்லையா என ஏங்கினர்.

9.2 ஆயின், இயற்கையின் இயல்பினை வெல்லுதல் இயலாது என்ற உண்மையை உணர்ந்தனர். குமரிக் கண்டத்தினின்றும் பெயர்நது செல்வதன்றி வேறு வழி இல்லை என உறுதி கொண்டனர். உடனே, எங்கு செல்வது? எப்படிச் செல்வது? என்னும் வினுக்கள் அவர்கள் உள்ளத்தில் எழுந்தன.

10.0 தோன்றின தொல்வனப்புகள்

10.1 அதற்கு விடைகாண அறிஞர் குழுவைக் கூட்டினர். அவ்வறிஞர் குழு ஆய்ந்து கண்ட முடிவால்தான் பாண்டியன் நெடியோன் கடலோடிய நெடியோன் ஆனுன். செங்கோன், உலகின் அக்கால இயல்பையும் வரலாற்றையும் இயம்பும் இணையிலா இலக்கியமான ‘செங்கோன் தரைச் தரைச்செலவி’ன் தலைவன் ஆனுன்.

11.0 அறிஞர் கண்ட முடிவு

11.1 அறிவிலும் ஆற்றலிலும் அரும்பெரும் பயன் தரும் பண்பிலும் மீமிசை நிலையடைந்த குமரிக் கண்டத் தமிழரின் அறிஞர்குழு கண்டு அறிவித்த முடிவு என்ன? இன்னும் சிற்சில ஆண்டுகளுக்குள் இக்குமரிக் கண்ட பெரும் நிலப்பரப்பு நீருள் அமிழ்ந்துவிடும். அதற்குள்ளாக இங்குள்ள மக்களையெல்லாம் தகுந்த முறையில் உலகின் பிற இடங்களுக்குக் குடியேற்ற வேண்டும். அதற்கு அரசரும் பிறரும் ஆவன செய்க என அறிவித்தனர்.

12.0 உலகெங்கும் தமிழ் ஓங்கட்டும் :

12.1 அறிவிப்பை ஆழ்ந்து எண்ணி, ஆய்ந்து உணர்ந்த பாண்டியன் நெடியோன் அமிழ்தத் தமிழ் தந்த அருங்கலைகள் எல்லாம் உலகம் முழுவதும நிறைந்து விளங்க வேண்டும் தமிழ் அறிவால் உலகம் மேன்மேலும் ஓங்கி வாழ்வில் உயர்நிலை காணவேண்டும். அதற்கு இக்குமரிக் கண்ட அழிவையே ஓர் தூண்டுகோலாய்க் கொண்டு அருஞ்செயல் புரிய வேண்டுமெனத் திட்டமிட்டான்.

13.0 பாண்டியனும் படைத்தலைவனும்.

13.1 பஃறுளியாற்றைப் பயனுற அமைத்த பாண்டியன் நெடியோன் அத்திட்டத்தை உடனே செயல்படுத்த தன் அருந் துணைவனான செங்கோனை அழைத்தான். நம் மக்களை எல்லாம் குமரிக் கண்டத்தினின்றும் அழைத்துச் சென்று தக்க இடத்தில் வாழச் செய்யவேண்டும். எங்கெங்கு வாழத் தகுந்த இடம் இருக் கின்றது என்று அறிந்தால் தானே மக்களை அலைக்கழிக்காமல் அழைத்துச் சென்று குடியேற்ற முடியும் அதற்கான திட்டத்தை யாண்டியன் தன் படைத் தலைவனுக்கு அறிவித்தான்.

14.0 நெடியோன் நிகழ்த்திய உரை

14.1 என தருமைச் செங்கோனே ! நீ இவ்வுலகெங்கும் தரை வழியாய்ச் செலவு மேற்கொள்ள வேண்டும். வேண்டிய அறிஞர்கள் புலவர்கள், துணைவர்கள், கருவிகளுடன் சிறந்த இத்தரைச் செலவை மேற்கொண்டு விரைந்து உலகை வலம் வந்து திரும்பு.

14.2 நான் கடல்வழியாய்ப் பயணம் செய்து விடற்கரிய தமிழ் அறிவையும் பண்பையும் கலைகளையும் வாழச் செய்யும் இடங்களைக் கண்டறிந்து வருகிறேன். எனது கடற்செலவின் போது நான் இறங்கிய நிலப்பகுதிகளில் எல்லாம் தகுந்த அடையாளங்கள் செய்துவிட்டுச் செல்கிறேன்.

14.3 ''என்னுடைய பாதங்கள் பட்ட இடங்களையெல்லாம் நீ அறிந்து கொள்ளுமாறு ஏற்ற அடையாளம் விட்டுச்செல்வேன். அதனைக் கண்டு உன் தரைச்செலவின் போக்கினை நீ வரையறுத்துக் கொள். இருவரும் ஒரே இடத்தைக் கண்டு காலத்தை வறிதே போக்கும் செயலினை இதன் வழித் தவிர்க்கலாம்.

14.4 ''நான் செல்லும் கடற்செலவு துன்பமில்லாதது. ஆயின் நீமேற்கொள்ளவுள்ள தரைச்செலவு மிகுந்த இடர்பாடுகளையும்

அளவில்லாத் துன்ப துயரங்களையும் தரக்கூடியவை. அத்தனையும் வென்று இச்செயலினை வெற்றிகரமாய் முடிக்கும் திறன் உனக்கு உண்டு என்பதால் இப்பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கின்றேன்.

14.5 ''மேலும் இவ்வரிய பயணத்தால் இந்த நிலவுலகின் இயல்புகளை யெல்லாம் அறியலாம். அங்கங்கு இருக்கும் இயற்கைச் சூழல்களின் அரிய தன்மைகளை உணரலாம். நாம் அறியாதிருக்கும் எத்தனையோ அரும்பெருஞ் செய்திகளையெல்லாம் இயற்கைத் தாய் நமக்கு அறிவிப்பாள்.

14.6 ''அத்தனையும் கண்டு அறிந்து விட்டுவிடாது கவின்மிகு தமிழ்ப்புலமையாளர்களால் அதனைப் பதிவு செய்து வை. உனது தரைச்செலவும் எனது கடற்செலவும் என்றும் உலக வரலாற்றை மக்களுக்கு உணர்த்தி நிற்கும். இன்று தோன்றியுள்ளது போன்ற தவிர்க்க முடியாத இயற்கை அழிவினின்று அவை அவர்களைக் காக்கும் வழிகாட்டியாய் விளங்கும்.

14.7 இவ்வனப்புமிகு பணியை ஆற்றும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருப்பது நாம் பெற்ற பெரும் பேருகும். இப்பயணத்தை உடனே நாம் தொடங்குவோம்'' என நெடியோன் மொழிந்தான்.

15.0 வனப்புமிகு வரலாறு படைத்தனர்.

15.1 அவ்வண்ணமே நெடியோன் கடற்செலவு மேற்கொண்டான். செங்கோன் தரைச்செலவு மேற்கொண்டான். இருவரும் வேண்டிய ஏந்துகளுடன் உலகை வலம் வந்து உறுபயன் விளைத்தனர்

15.2 பாண்டியன் நெடியோன் செயற்கரும் இச்செயலைச் செய்தான் என்பதனை 'கடலோடிய நெடியோன்' என்றும், 'முந்நீர் விழவின் நெடியோன்' எனவும், 'வடிம்பலம்ப நின்ற பாண்டியன்' எனவும் தமிழ் இலக்கியங்கள் தக்கவண்ணம் போற்றுவதே அருஞ் சான்றகும்.

15.3 மறைந்துபோன அருந்தமிழ் நூல்களில் ஒன்று 'செங்கோன் தரைச்செலவு' என்பதையும், இது குமரிக் கண்டத்தில் தோன்றிய குறைவிலா நிறைவு நூல் என்பதையும் ஒண்டமிழ் உரையாசிரியர் கள் உரைத்துள்ளனர். மேலும், அரிய 'தாப்புலிப்பா' என்னும் யாப்பில் யாக்கப்பட்ட நூல் இது என்பதை 'முச்சங்கங்களின் வரலாறு' என்னும் ஆய்வு நூலின் வழி அறிகிரும்.

16.0 இன்றையக் கடலடி ஆய்வுகள்

16.1 தமிழ் இலக்கியங்கள் தரும் இத்தகைய சான்றுகள் போக, இன்றையக் கடலியல் ஆய்வாளரான சோவியத் நாட்டு அறிஞர் திரு. அலெக்சாண்டர் கோந்தரதோன் அவர்களின் ஆய்வு மேற்குறித்தவற்றை நிலைநாட்டும் மேலான சான்ருய்த் திகழ்கிறது. அவர் தமது 'முக்கடல் ஆய்வுகள்' (The riddles of three Oceans.) என்னும் நூலில் கடல் கடக்கத் தமிழர்கட்டிய பாலங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

17.0 கடலுக்குள் கற்பாலங்கள்.

17.1 அஃதாவது, மடகாசுகர் தீவிற்கு அருகிலும், ஆசுத்திரேலியாவிற்கு அருகிலும் கடலுக்குள் ஏறத்தாழ இருகல் தொலைவுள்ள கற்பாலங்கள் அமைத்ததையும், அப்பாலங்கள் இன்றும் கடலடியில் இருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

17.2 மடகாசுகர் தீவுப் பாலம் ஆப்பிரிக்காவைப் பழங்குமரிக் கண்டத்தோடு இணைக்கிறது. ஆசுத்திரேலிய கடலடிக் கற்பாலம் அக்காலக் குமரிக்கண்டத்தை ஆசுத்திரேலியாவையும் அன்று அதனோடு சேர்ந்திருந்த பிற நிலப் பகுதிகளையும் இணைக்கிறது.

18.0 பாலங் கட்டிய பாங்குடையோர்.

18.1 இப்பாலங்கள் கட்டப்பட்டது ஏன்? கடலால், சிறிது சிறிதாக மூழ்கடிக்கப்பட்டு வந்த குமரிக் கண்டத்தைத் தமிழ் மக்களை அங்கிருந்து பிறநிலப் பகுதிகளுக்குக் குடியேற்ற பாண்டியன் நெடியோனும் செங்கோனும் அமைத்தவையே அக்கற் பாலங்கள்.

18.2 கடற்செலவும், தரைச்செலவும் மேற்கொண்ட இருவரும் சில ஆண்டுகளுக்குப் பின் உலகெங்கும் சுற்றிவிட்டு குமரிக் கண்டம் வந்தடைந்தனர். குறுகிய கடற் பகுதிகளில் பாலங்கள் அமைத்து மக்களை மட்டுமல்லாமல் அவர்கள் விரும்பும் அவரவரின் அனைத்து உடைமைகளையும் எடுத்துக்கொண்டு அவரவர் விரும்பும் இடத்தில் சென்று குடியேற ஏற்றதாகக் கற்பாலங்களை அமைத்தனர்.

18.3 இவ்வுண்மைக்குச் சான்றுகள் இன்றைக்கும் ஆப்பிரிக்காவிலும் ஆசுத்திரேலியாவிலும் வழங்கும் பழைய மொழிகளும், சில பழக்க வழக்கங்களும், தமிழோடு மிக நெருங்கிய தொடர்புடையவனாக இருக்கின்றன.

19.0 குடிமுழுகினும் பிரியாக் குடிகள்.

19.1 இவ்வண்ணம் குமரிக் கண்டத்தினின்றும் பலர் பிற பகுதிகளுக்குச் சென்றது உண்மை. என்றாலும் எல்லா மக்களுமே சென்றுவிடவில்லை. கடல் கோளால் குடிமுழுகிப் போயினும் குமரிப் பெருநிலம் விட்டுப் பிரிய மனமின்றிப் பலர் இருந்தனர்.

19 2 இயற்கை நிகழ்ச்சியான கடல் தன்போக்கில் குமரிக் கண்டத்தைச் சிறிது சிறிதாக விழுங்கிக் கொண்டது. கடல் நெருக்க நெருக்கக் குமரித் தமிழ் மக்கள் வடபுலம் நோக்கிப் பெயர்ந்தனர். இக்குடிமுழுகிய நிகழ்ச்சியினையே இன்றைக்கும் நாம் இவ்வரலாறு அறியாமலேயே, அத்தகைய துன்பம் வந்தபோதும்

என்ன? குடியா முழுகிவிட்டது?

எனக் கேட்கிறோம். இது நம் குருதியில் ஊறிப்போன குமரிக் கண்டப் பண்பாகும்.

19 3 இவ்வரலாற்று நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம்

''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி'.....எனவும்,

மணிமேகலை,

'நாகநன் னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்' எனவும்

பதிவு செய்து வைத்துள்ளன. இறையனார் அகப்பொருள் உரையும் இதனை ஏற்ற வண்ணம் போற்றியுரைத்துள்ளது.

20.0 தென்புலத்தார்.

20.1 இவ்வண்ணம் தென்புலத்தினின்றும் வடபுலம் பெயர்ந்த தமிழ் மக்கள் தம்மோடிருந்து அத்தென்புலத்தினின்றும் உலகின் பல பகுதிகளுக்கும் பிரிந்து சென்றோரை மறந்துவிட முடியுமா? உடன் பிறப்பன்றோ அவர்கள்! அதனால்தான் தம் ஓம்புதற் கடமையில் முதலிடத்தை தென்புலத் தார்க்குத் தந்தனர்

20.2 உடன் பிறந்து உலகெங்கும் பரவிவாழும் அத்தென்புல வாழ்நருக்கே தெய்வத்தைவிட மேலான முதன்மையிடம் தந்து போற்றியுள்ளனர் தமிழ் மக்கள். இந்த அரிய வழக்கத்தைப் பெருமையுடன்,

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்று
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை."

எனப் பதிவு செய்துள்ளது அருந்தமிழ் வாழ்வியல் இலக்கியமான திருக்குறள். இத்தகு வரலாற்றுப் பின்னணி உள்ளமையால் தான், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, உலகில் எவரும் எண்ணாத 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கருத்து தமிழர்க்கு மட்டும் தோன்றியது.

21.0 செங்கோனும் செங்கோரும்.

21.1 அன்று 'செங்கோல்' என்னும் தமிழன் ஆப்பிரிக்காக் கண்டத்தைக் கண்டறிந்து அங்கு தம் மக்களைக் குடியேற்ற வழி செய்தான். இன்று 'செங்கோர்' என்னும் ஆப்பிரிக்காக் கண்டத்து செனகல் நாட்டுக் குடியரசுத் தலைவர் நாங்கள் அக்குமரிக் கண்டத்துத் தமிழர் தம் வழிவந்தவர் தாம் என்னும் உண்மையை ஆராய இங்கிருந்து ஓர் அறிஞரை அழைத்துச் சென்றுதம் பல்கலைக் கழகத்தில் அமர்த்தி ஆக்கம் புரிந்து வருகிறார்.

22.0 தென்னாடு.

22 1 'ஆசுத்திரேலியா' என்னும் சொல்லிற்கே 'தென்னாடு' என்பதுதான் பொருள். அங்குள்ள மொழிகளோ தமிழோடு முற்றிலும் தொடர்புடையன. இதற்கெனத் தனி முயற்சியின்றியே இன்று இவ்வுண்மைகள் எல்லாம் வெளிப்படத் தொடங்கியுள்ளன

23.0 சீரிய முயற்சி செய்தல் வேண்டும்.

23 1 இனி தகுந்த, வண்ணம் முயன்றால் 'நெடியோன் கடற் செலவும்' 'செங்கோன் தரைச் செலவுமே' தமிழர்தம் அமிழ்தான வல்லமைமிக்க தொல்வனப்புகள் என்பதற்கு ஆயிரமாயிரம் அருஞ் சான்றுகள் கிடைக்கும். அதோடு, மறைந்த நூலாய் எண்ணும் செங்கோன் தரைச் செலவு என்னுஞ் செந்தமிழ் நூல் சீரிய முயற்சி இருப்பின் செப்பமுறக் கிடைப்பினும் கிடைக்கலாம்

24.0 முடிப்புரை.

24.1 உலகின் வேறெந்த நாட்டுத் தொல்வனப்புகளையும்விட, தனித் தன்மையும், உண்மை வரலாற்றை உலக வரலாற்றை உரைக்கும் உயர்வு சான்றதும் தமிழ்த் தொல்வனப்புகளே. இது குறித்துச் சிறிது எண்ணுவோரும் மேற்குறித்த மெய்மையை இனிதே உணரலாம்.

'கடியன்'

பி. எல். சாமி. ஐ ஏ. அசு.

1971 ம் ஆண்டில் பறவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துவரும் பம்பாய் இயற்கையியல் கழகத்தார் (Bombay Natural History Society) கோடிக்கரையில் (Pointcalimere) பறவைகளை வலைபோட்டுப் பிடித்து ஆராய்ந்து வந்தனர். சைபீரியா போன்ற பல தொலைவான வெளிநாடுகளிலிருந்து வந்த பறவைகளைப் பிடித்து அவைகளின் கால்களில் இருந்த வளையங்களில் காணும் செய்திகளிலிருந்து வலசை வந்த பறவைகள் எங்கிருந்து வந்தன எப்போது கிளம்பின என்பதையெல்லாம் கண்டு ஆராய்ந்தனர். உருசியாவிலுள்ள சைபீரியா முதலிய மிகத் தொலைவான நாடுகளிலிருந்து கூட மைனு அளவுள்ள சிறிய பறவைகளிலிருந்து காக்கை போன்ற அளவுள்ள பெரிய பறவைகள் உருசியா, ஐரோப்பா ஆகிய தொலைதூர நாடுகளிலிருந்து கோடிக்கரைக்கு வலசை வருவது கண்டுபிடிக்கப்பட்டது. வலைகளில் பிடித்த வலசை போகும் பறவைகளுக்கு காலில் வளையம் போட்டு விட்டுவிடுவர். அவை வெளிநாடுக்கு வலசை போகும். உருசியாவிலிருந்து வந்த ஒரு பறவையின் காலில் இத்தகைய ஒரு வளையம் காரைக்காலில் கிடைத்தது. அது பம்பாயில் இயங்கி வரும் இயற்கையியல் கழகத்தாருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

வலசை போகாத உள்நாட்டுப் பறவைகளும் வலைகளில் பிடிபடும். நான் கோடிக்கரையில் பறவைகளைக் கண்டு ஆராயச் சென்றபோது 'கடியன்' என்றொரு பறவையைப் பாமர மக்கள் அழைத்ததைக் கேட்டுள்ளேன். இப்பறவையை நான் ஆறுவது வகுப்புப் பள்ளிச் சிறுவனாக இருக்கும் போது கண்டுள்ளேன். ஒரு தடவை இப்பறவையின் இரு குஞ்சுகள் மரத்திலிருந்து கீழே விழுந்துவிட்டன. இந்தக் குஞ்சுகளை ஒரு இரும்புக் கம்பிக் கூண்டுக்குள் வைத்து வீட்டில் வளர்க்க முயன்றேன். ஆனால் இப்பறவைகள் வெட்டுக்கிளி போன்ற பூச்சிகளைப் பிடித்து உண்ணும் என்று கேள்விப்பட்டு இப்பறவைகளை நீண்டகாலம் வளர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டது. கூட்டிலிருந்த பறவைக் குஞ்சுகளை எங்கள் வீட்டிலுள்ள முருங்கை மரத்தடியில் நிழலில் வைத்தேன். அப்போது,

கொடுக்காப்புளி மரத்திலிருந்து இக் குஞ்சுகளின் தாய்தந்தையர் எப்படியோ தங்களது குஞ்சுகளை இனங்கண்டு கூட்டிலுள்ள கம்பிகளின் சந்துகளின் வழியாக வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளைப் பிடித்து வந்து பல தடவை குஞ்சுகளுக்கு ஊட்டின. தீற்றின. குஞ்சுகள் பறக்கும் நிலையை அடைந்ததும் கூட்டிலிருந்து விடுதலை ஆக்கிப் பறக்க விட்டேன்.

சிறுவனாயிருக்கும்போது இப்பறவையின் பெயரைத் தெரிந்து கொள்ளப் பலரை உசாவினேன், அதன் பெயர் தெரியவில்லை. குருவிக்காரர்கள் என்றழைக்கப்படும் பழங்குடி மக்களான நரிக்குறவர்களை உசாவியபோது இப்பறவையின் பெயர் கசாப்புக்காரன் என்று கூறினர். பள்ளி மாணவனாயிருந்தபோது இப்பெயரின் பொருள் புரியவில்லை. இந்தக் குருவி பெரும்பாலும் வெட்டுக்கிளி முதலிய பூச்சிகளையும் மற்றும் பல்லி, சிறிய ஓணான் முதலிய உயிரிகளையும் பிடித்துத் தின்னும். இந்தக் குருவி அன்றாடம் தனது தேவைக்கு மேல் பூச்சி முதலியவற்றைப் பிடித்துத் தின்றது போக மீதியானவற்றை மரஞ்செடிகளில் உள்ள முட்களில் சொருகி வைத்துப் பின்னர் தின்பதுண்டு. இம்முறையான இதன் பழக்கத்தால் இக்குருவியைக் கசாப்புக்காரன் என்று அழைத்தனர். கசாப்புக் கடையில் ஆடுகளை வெட்டி இறைச்சியைத் தொங்க விடுவது போல் பூச்சி முதலியவைகளைப் பிடித்து மரஞ்செடிகள், முட்களில் செருகித் தொங்க வைப்பதால் கசாப்புக்காரன் குருவி (Butchers bird) என்று மிகமிகப் பொருத்தமாக அழைக்கப் படுகின்றது. இந்தக் குருவி உண்ணும் பழக்கத்தை அதன் பெயரிலேயே புரிந்து கொள்ள முடியும். இயற்கைச் செய்தியைக் கண்டு பொருத்தமாக பெயரிட்டழைத்த நாட்டார் வழக்கு மிகவும் போற்றுதற்குரியதாகும். மற்றும் இப்பறவையை மலையாள மொழியில் அசுரத்தான் என்றழைப்பதையும் காணலாம். அசுரனைப் போல கொடுமையாக நடந்து கொண்டு பூச்சிகளைக் 'கபளீகரம்' செய்வதால் அசுரத்தான் என்று மலையாளத்தில் அழைக்கப் பட்டுள்ளது. இப்பறவையை நான் பள்ளி மாணவனாக இருந்த போது கவனித்திருக்கிறேன். இப்பறவையை வேலமரம், கொடுக்காப்புளி மரம் இவைகளில்தான் அடிக்கடி கண்டிருக்கின்றேன் இந்த மரங்களுக்கு முட்கள் உண்டு. பூச்சி முதலிய

வைகளைப் பிடித்து முட்களில் சொருகிச் சேமித்து வைக்கவே இந்த முள்மரங்களில் இப்பறவை வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இப் பறவைகள் பிடிக்கும் பூச்சி முதலியவைகளைத் தலையும் வயிற்றுடல் பகுதியும் சேரும் இப்பகுதியில் சொருகி வைக்கின்றன. பிடிக்கும் பூச்சி முதலியவைகள் உடனே கெட்டு அழுகாமல் இருப்பதற்குத் தான் இவ்வாறு சேமிப்பதாக பறவை நூலறிஞர்கள் (ornithologists) கூறுகிறார்கள்.

"All shrikes are carnivorous and are bold and aggressive birds. They capture mostly insects but these are supplemented especially in the larger species by small reptiles, mammals and birds. Many species impale the prey on thorns, twigs, sticks or even barbed wire. It is a method of providing a stick pile of food against periods of shortage. Popular tradition has always inclined towards the latter theory, and the shrikes reserves of food are known as 'larders'. The theory is also supported by the fact that in many cases the prey is impaled with care often first by the point where the head joins the body so that it remains alive although paralysed thus avoiding or atleast delaying the effects of decomposition. Further support is forthcoming when food is plentiful shrikes collect together all their prey without impaling them and eat only the innards.

இவ்வாறு கொடிய, கடிய முறையில் பூச்சி முதலியவற்றைக் கொன்று சேமித்து உண்ணும் பறவையைக் கோடிக்கரையில் கடியன் என்ற தூய தமிழ்ப் பெயரால் அழைத்தது மிகமிகப் பொருத்தமே.

விரல்—விறல்

விரல் :- விரிதற்குரிய தாதல்—கைகால்களின் முற்பகுதி உறுப்பு (விர்) விரி இதன் முதனிலை

விறல் :- வெற்றியுளதாதல் — செயற்பண்பைக் குறிக்கும் (வீற்) வீறு இதன் முதனிலை.

ஏது கவிதை?

(புலவர் இரா. மணியன், M. A.,
துணைப் பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி)

தமிழ் நாட்டில், பண்டைக் காலத்தில், உரைநடை மிகுதியாகப் பயன்பாட்டில் இல்லாததால் மருத்துவம் முதலிய அறிவியல் செய்திகளைக் கூட பாட்டு வடிவத்தில் செய்யுளாக இயற்றி விட்டனர். அவற்றுள் பாட்டுக்குக் கூறப்பெற்ற எல்லாக் கூறுகளும் இருப்பதில்லை. நல்லிசைப் புலவர்கள் இயற்றிய பாடல்களில் தாம் யாப்புறுப்புக்கள் யாவும் குறைவின்றி இருக்கும். பாட்டு என்று கூறப்பட்டு வந்ததைக் கவிதை என்று பிற்காலத்தில் கூறத் தொடங்கினர். பாட்டுக்கும் செய்யுளுக்கும் வேறுபாடு கொள்ளத் தெரியாத பலரும் எல்லாவகைச் செய்யுள்களையும் கவிதை என்று கூற முற்பட்டு விட்டனர். அதனால்தான் எது கவிதை, எது கவிதையில்லாத செய்யுள் என்று ஆராய வேண்டிய நிலைமைக்கு ஆளாகி விட்டோம்.

பாட்டும் செய்யுள்தான் — ஆனால் செய்யுள்கள் யாவும் பாட்டுக்கள் ஆகா. உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் ஆகிய செய்யுள் வகைகளும் பாட்டோடு சேர்த்துக் கூறப் பெற்றுள்ளதைத் தொல்காப்பியச் செய்யுளியல் பயின்றோர் அறிவர். பாட்டைத் தவிர்த்த உரை முதலான செய்யுள் வகைக்கு யாப்புறுப்புக்கள் யாவும் இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. பாட்டைக் கவிதை என்று கூறும் வழக்கம் நிலைத்து விட்டதால், பாட்டுக்குரிய இயல்புகள் யாவற்றையும் ஒருங்கே பெற்ற ஒரு செய்யுளைத்தான் கவிதை என்று ஒப்புக் கொள்ள இயலும்.

'வினாவினும் செப்பினும் சினையும் முதலும் தம்முள் மயங்கி வருதல் வழு' என்னும் கூற்றை விளக்கப் போந்த சேனாவரையர், "இம்மகள் கண் நல்லவோ, கயல் நல்லவோ என வழக்கின் கண்ணும் மயங்கி வருமாலெனின் — உண்மை உணர்தற்கு வினாயதன்றி ஐய உவமை வாய்பாட்டாற் கண்ணைப் புனைந்துரைத்தல் கருத்தாகலின், அன்னவை யெல்லாம் உரை என்னும் செய்யுளாம் என்பது" என்று கூறியிருப்பதை நோக்குங்கால், கவிதைக் கூறுகள் குறைவாக உள்ள செய்யுள்களைக் கவிதையுள் அடக்காமல் உரையுள் அடக்கி 'உரைச்செய்யுள்' என்று கூறுவதே பொருந்தும்.

ஒரு செய்யுளுள், கவிதைக்குக் கூறப்பெற்ற இயல்புகள் பலவற்றுள் ஓர் இயல்பு குறைந்தாலும் அதைக் கவிதையாகக் கொள்ள இயலாது. அதனை உரை முதலாகக் கூறப்பெற்ற வற்றுள் ஏதேனும்மொரு செய்யுள் வகையாகத்தான் கொள்ள வேண்டும். பிற்காலத்தில், கவிதையும் செய்யுளும் ஒன்றாகவே கருதப் பெற்ற காரணத்தால் உரைச்செய்யுளை 'வசனகவிதை, என்றனர் போலும். வசன கவிதை என்ற பெயரில் பாரதியார் எழுதியவை யாவும் உரைச்செய்யுளே என்க.

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வேற்று நாட்டு இசை தமிழ் நாட்டில் புகுந்தது போல, வேற்று நாட்டுச் செய்யுள் வடிவங்களும் தமிழ் மொழியுள் புகத் தொடங்கின. குறிப்பாக வால்ட் விட்மன் போன்ற அயல் நாட்டுக் கவிஞர்கள் எழுதிய ஆங்கிலக் கவிதைகளின் தாக்கம் தமிழ் நாட்டுக் கவிஞர்களிடையே ஒருவகைப் பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. கவிதையுள்ளம் படைத் தோருள் சிலர் அயல் நாட்டுக் கவிதை வடிவங்களைத் தமிழ் மொழிக்குக் கொண்டு வந்து சேர்த்தால் தமிழ் பொலிவுறும் என்று நம்பினர். ஆனால் அவர்கள் யாவரும் அயல் நாட்டுக் கவிதை யியல்புகள் யாவற்றையும் முற்றும் உணர்ந்து கொள்ள முடியாத நிலைமையில் இருந்தோரே ஆவர்.

ஆங்கிலம் போன்ற அயல்நாட்டு மொழிகளின் கவிதை இயல்புகளை – மரபுகளை — இலக்கண அமைதிகளை — ஓசை அமைப்புகளை — ஒலியளவுகளை முற்றும் உணராத சிலர் அக்கவிதைகளுள் அமைந்து கிடந்த ஒரு சில வடிவங்களை மட்டும் ஓரளவு கண்டு கொண்டு, அத்தகைய வடிவமைப்பில் தமிழ்ச் செய்யுள்களை இயற்றி, அவற்றிற்குப் புதுக் கவிதைகள் என்ற பெயரையும் சூட்டித் தமிழ் நாட்டில் பரவச் செய்து விட்டார்கள்.

புதுக் கவிதை என்ற பெயரில் உரைச்செய்யுள்களை இயற்றிய வர்கள் தமிழ்க் கவிதை உலகுக்கு ஆக்கம் தருவதாக எண்ணிக் கொண்டனர் ; எண்ணியதை எண்ணியாங்குக் கூறுவதுதான் கவிதை என்று தவறாகக் கருதிக் கொண்டனர் ; யாதொரு கட்டுக் கோப்பையும் வரையறுத்துக் கொள்ளாமல் தமிழ் மொழியின் தனிப் பண்பை மறந்தனர் ; தமிழ்ப் பாட்டின் மரபுகளை மீறினர் ; ஓசையமைப்புக்களைப் புறக்கணித்தனர் ; தேவையற்ற நிலையிலே கூட பிறமொழிச் சொற்களை மிகுதியாகக் கலந்தனர் ; பண பலத்தையும், பத்திரிகை பலத்தையும் பயன் படுத்திக் கொண்டு, தங்களின் உரைச் செய்யுள்களைத் தமிழ்நாடெங்கும் பரப்பினர் ; பல்கலைக் கழகத்தினரையும் கூடத் தம்பக்கம் இழுத்துக் கொள்ளும் அளவுக்கு வெற்றியும் கண்டனர்.

வெற்றி கண்ட அவர்கள் 'வால்ட்விட்மனையும் விடத் தாங்கள் தாம் உலகப் பெருங்கவிஞர்கள்' என்று தங்களைத் தாங்களே பறைசாற்றிக் கொண்டனர் — தம் நண்பர்களைக் கொண்டும் பறைசாற்றச் செய்தனர். தாங்கள் எழுதிய புதுக் கவிதைகள் தாம் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலத் தமிழிலக்கிய வளர்ச்சி என்று கூறத் தொடங்கினர். ஆனால் இவ்வளர்ச்சி, தமிழ் இலக்கிய வளர்ச்சியின் இறுதிக் காலமாக ஆகிவிடக் கூடாது என்பதுதான் தமிழ்ச் சான்றோர்களின் உள்ளக் கிடக்கையாகும்.

பாரதியார் முதலிய பெருங்கவிஞர்கள் எழுதிய வசன கவிதைகளுக்கும், இப்பொழுது தங்களை உலக மகா கவிஞர்கள் என்று கூறிக் கொள்ளும் இவர்கள் எழுதுகின்ற புதுக் கவிதைகளுக்கும் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. பாரதியார் எழுதியவை எல்லோருக்கும் புரியக் கூடியவை—இவர்கள் எழுதியவை இவர்களுக்கே கூடப் புரியாதவை.

வசன கவிதை என்பது ஆங்கில மொழிக்கே புதியது ஆனாலும் வெற்றி கண்டதன்று. மொழி ஒரு கருவிதான் என்றாலும், அதன் மூலம் வெளியிடப்பெறும் கருத்துத் தொடர்களையெல்லாம் கவிதையென்று ஏற்றுக் கொள்ள இயலாது. ஏதாவதொரு யாப்பமைதியைப் படைத்துக் கொள்ளும் ஆற்றலற்றவர்களும்— இவ்வாறு எழுதினால்தான் விலை போகும் என்று எண்ணுகின்ற விலைக் கவிஞர்களும் தாம் இன்றைய புதுக் கவிதை எழுத்தாளர்களாக இருக்கின்றனர்.

'எளிய நடையில் தெளிவில்லாமலும் எழுத முடியும்' என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது புதுக்கவிதை. தெளிவற்ற கருத்துக்களை எளிய சொற்களில் குழப்பம் விளையுமாறு எழுதிப் புரியாமல் செய்வதுதான் புதுக்கவிதை என்று எண்ணு மளவுக்குச் சிலர் எழுதி வருகின்றார்கள். பொருளற்ற எழுத்துக் குவியல்களால் படிப்பவர்களை மடக்க வைப்பதையே தங்களுக் குரிய பெருமையாகக் கருதிக் கொள்ளும் புதுக்கவிதை எழுத் தாளர்கள் தமிழ் நாட்டில் பலைக்காளான்கள் என வளர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"கவிஞர்கள் இலக்கணத்துக்கு அடிமையாகக் கூடாது' என்பது புதுக்கவிதையாளர்களின் கோட்பாடு. இக் கோட்பாட்டில் யாருக்கும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. ஆனால் 'இலக்கணத்தைக் கவிஞர்கள் அடிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்' என்பதுதான் தமிழ்ச் சான்றோர்களின் கோட்பாடு. இதைப் புதுக் கவிதையாளர்கள் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள்.

வழக்காற்றிலுள்ள ஒரு சாதாரண எளிய சொல்லை, மாத்திரை யளவில் தடுத்து நிறுத்தி யாப்பின் கட்டுக் கோப்புக்குள் கொண்டு வரும் போதுதான் அச்சொல் புதியதோர் எழுச்சி பெற்றுப் பொலிவடைகின்றது. ஓசைக் கூறுபாடுகளைக் குழலின் கட்டுக் கோப்புக்குள் கொண்டு வரும் பொழுதுதான் இசையின்பம் உண்டாகின்றது. அதுபோலச் சொற்களைச் சீராக்கித் தளையிட்டு யாப்பின் எல்லைக்குள் விளையாட விடும் பொழுதுதான் கவிதைச் சுவை பெருக்கெடுக்கிறது

தமிழ்க் கவிதை வரலாற்றின் தொடக்க காலத்தில் அகவற்பாக்களே இருந்தன ; பின்னர் வெண்பாக்கள் தோன்றின ; கலிப்பாவும் ; வஞ்சிப்பாவும், மருட்பாவும், பரிபாடலும் எனப் பலவகைப் பாக்கள் பெருகின ; துறைகளும் தாழிசைகளும், விருத்தங்களும், சிந்துகளும், கும்மிகளும், இசைப்பாக்களும் எனப் பலவகைப் பாவினங்கள் மல்கின. இவற்றைப் போன்ற புதிய பாவகைகளை ஏற்கத் தமிழ்ச் சான்றோர்கள் என்றும் தயங்கியதே இல்லை. எனினும் யாப்பமைதி இல்லாதவற்றை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

மேலை நாட்டுத் திறனாய்வாளர்களும் கூட உணர்ச்சி, கற்பனை, கருத்து, வடிவம் ஆகிய நான்கும் ஒரு சேர உடையது தான் கவிதை என்று கூறுகின்றனர். உணர்ச்சியை உயிர் என்றும் கற்பனையை உடல் என்றும், கருத்தை உள்ளம் என்றும், வடிவத்தை ஆடை என்றும் அவர்கள் விளக்குகின்றனர். இந் நான்குள் எது குறையினும் கவிதையாகாது என்றும் வரையறுத் துள்ளனர்.

ஒரு மனிதனுக்கு உயிர் இன்றியமையாதது ; அவ்வுயிர் தங்க உடலும் வேண்டும் ; உயிரும் உடலும் மட்டும் கொண்டவன், மனிதனாவதற்கு உள்ளமும் வேண்டும் ; அவன் வெளியிலே உலவ ஆடையும் இன்றியமையாததாகும். ஒருவேளை அவன் ஆடையின்றி வெளியிலே உலவ முற்பட்டால், மற்றவர்கள் அவனைப் பைத்தியக்காரர்களின் விடுதிக்கு அனுப்பி வைத்து விடுவார்கள். ஆகவே, ஒரு கவிதை மக்களிடையே நடமாட — நீடித்து நிலைக்க உணர்வு, கற்பனை, கருத்து, வடிவம் ஆகிய நான்குமே இன்றியமையாதன என்பர். இவை நான்கும் தமிழ்ப் பாட்டின் யாப்புறுப்புக்களுள் அடங்கியவையே என்பதை செய்யுள் நூல் வல்லார் உணர்வர்.

எனவே யாப்புறுப்புக்களுள் எதுவும் குறையாத செய்யுளே கவிதை என்பது வெள்ளிடை மலை.

பெரியகுளத்துக்[1] கல்வெட்டும்[2] சுவடற்றுப்போன சுற்றூர்களும்

(புலவர் து. இராசகோபால்)

முன்னுரை :

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 19[3]-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்று இங்கே[4] காணப்படுகின்றது. அதில் பெரியகுளம் உள்ளிட்ட பகுதி மேல் நெடுங்களநாடு என்ற நாட்டுப் பிரிவில் அடங்கியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டினுள் கீழ்க்கண்ட ஊர்கள் சுற்றூர்களாகக் காட்டப்பட்டுள்ளன.

1. வேள்குலராம நல்லூர்
2. எறிபடை நல்லூர்
3. ஆதனூர்
4. எம்பல்

இவற்றில் எவ்வூரும் இன்று இல்லை. வேள்குலராமநல்லூர் என்பது வேளிர் மரபில் வந்த ஓர் அரசனுடைய விருதுப் பெயரால் அழைக்கப்பட்ட ஊராக இருக்கலாம். எந்த மன்னன் என்பது கண்டு பிடிக்க முடியாத ஒன்று.

ஆதனூர் குறித்தும் அந்த நிலையே கொள்ளவேண்டியுள்ளது. இனி எறிபடை நல்லூர், எம்பல் என்னும் ஊர்ப் பெயர்க் காரணங் களை ஊர்ப் பெயராய்வு மூலம் அறிய விழைவது இக்கட்டுரையின் நோக்கம்.

எறிபடை நல்லூர்:

தமிழ்நாட்டில் ஊர்கள் வரிசையில் நல்லூர் என்னும் பெயர் தாங்கிய ஊர்கள் பல இருக்கின்றன. அவற்றுள் அரசர்கள்[5] தங்கள் பெயர் விளங்குமாறு உண்டாக்கிய நல்லூர்களும் உள்ளன என்பதை ஆராய்ச்சியால் உணரலாம்.

அவற்றினின்றும் மாறுபட்டனவாய், எறிபடை நல்லூர்[6] என்ற பெயரில் விளங்கிய ஊர்கள் அந்நாளில் வேறு சிலவும் இருந்திருக்கின்றன என்பது கல்வெட்டுக்கள் காட்டும் செய்தி யாகும்.

பெரியகுளம் என்று இப்போது வழங்கப்பெறும் இவ்வூரின் பழம் பெயர் என்ன? இதற்கு முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய கல்வெட்டுகள் "மேல் நெடுங்களநாட்டு ஆலங் குளமான நானாதேசி எறிவீரபட்டினம்"[7] என்ற விடையினைத் தருகின்றன,

இதனடிப்படையில் பெரியகுளத்தின் தொன்மைப்பெயர் ஆலங்குளம் என்பது உறுதியாகிறது. இந்நகருக்கு நானாதேசிக ளாகிய வணிகர்கள் ஒரு குழுவினராய் வருகை தந்தனர். தம் தொழிலைச் சிறப்புற நடத்தி வணிகத்தலமாக இந்நகரை மாற் றினர். இவர்கள் தங்கி வாழ்ந்த இடங்கள் வீரபட்டினம், எறி வீர பட்டினம் எனவும் வழங்கப்பெற்றன.

இக் குழுவிற்குத் தனிப்பட்ட படைகள் இருந்தன.[8] எறிவீரர்கள் என்றும், முனை வீரர்கள் என்றும், இளஞ்சிங்க வீரர் கள் என்றும், கொங்க வாளர்கள் என்றும் வீரர் குழுவின் பெயர்கள் வழங்கி வந்தன என்பது நூல்கள் வாயிலாக அறியக் கிடக்கும் செய்தியாகும்.

நானாதேசிக் குழுவினரின் பொருள்களையும், அவற்றைச் சேமித்து வைக்கும் கிடங்குகளையும் அப்படைகள் பாதுகாத்த துடன், அப்பொருள்களை எடுத்துப்போகும் வழிகளிலும் பாதுகாப்பு [9] அளித்ததாகச் சோழர் வரலாற்று நூல் [10] ஒன்று கூறுகிறது.

அத்தகைய வீரர்கள் வரிசையில் எறியீட்டிவீசும் வீரர்களும் இருந்தனர். அவர்கள் தாம் தங்கும் இடங்களில தங்களுக்கென ஒரு நல லூரைத் தக்க வைத்துக் கொண்டனர். அவர்கள் வாழ்ந்த ஊர் எறியீட்டிப் படைவீரர் நல்லூர் என்று வழங்கியிருக்க வேண்டும். அதுவே நாளடைவில் எறிபடை நல்லூரென மருவி வழங்கியிருக்கலாம என்பதே தெளிந்த உண்மை.

இத்திருப்பெயர் கொண்ட ஓர் ஊர் பெரியகுளம் பகுதியில் அந்நாளில் இருந்தது. அது மேல் நெடுங்கள நாட்டு ஆலங்குளமான நானாதேசி எறுவீரபட்டினம் என்னும ஊரையொட்டி எறிபடை வீரர் நல்லூர் (எறிபடை நல்லூர்) எனச் சிறந்திருந்தது எனபதும் நன்கறியக் கிடக்கின்றது. இதன் வளர்ச்சி கி. பி 12 ஆம நூற்றாண் டிற்குப் பின்னரும் வழக்கில் பயின்ற நிலையினைக் இங்கேயுள்ள கல்வெட்டுகள் உணரத்துகின்றன.

வழக்கற்றுப் போகக் காரணம்.

வணிக வளத்தால் வருவாயைப் பெருக்கிய வணிகப் பெருங் குடி மக்கள் இந்நாடு விட்டு வேறிடம ஊர்ந்தமையும், அவர் களோடு அவ்வீரர்களும் இடம்விட்டுப் பெயர்ந்தமையுமேயாகும். அதற்குப்பின சிற்றூராகிய எறிபடை நல்லூர் மெலல மெலல அடிச்சுவடற்றுப் போயிருக்கவேண்டும், எனபது மிகத் தெளிவான ஒன்றாம்.

எம்பல்.

இவ்வூர் பற்றி ஏதும் அறியமுடியவில்லை. இஃது ஊர்ப் பெயராயவுக்குடபட்டது. சிற்றேரியைக் குறிக்கும் ஏந்தல்[11] என்ற சொல 'எம்பல' எனத திரிந்திருக்கலாம். அல்லது கல் வெட்டில் எடுத்தெழுதுவோரால் ஏற்பட்ட பிழையாக இருக்கலா

மெனக் கருதவேண்டியுள்ளது. எம்பல் என்பது ஒரு சிற்றூரைக் குறிக்கும் என்பது இவர் கருத்து [11] மொழியியல் துறையினர் இது பற்றி விரிந்த செய்தியினைத் தருவது பெருமைக்குரியதாகும்.

முடிவுரை.

கல்வெட்டுகள் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்ட இவ்வூர்கள் சோழர்கள் இப்பகுதியில் வேர்விட்டுப் படர்ந்த நாளில் கயிலாச நாதர் காட்டில் கற்றளியாக எடுப்பிக்கப்பட்ட 'உய்ய வந்த ஈச்சுர முடைய நாயனார் திருக்கோயில் சுவர்களில் எழுதப் பட்ட வரலாற்று வடிவங்களால் அறியப்படுவனவாகும்.

மறைந்துபோன இத்திருநகர்களும் அவற்றின் சுற்றுப்பகுதி களும் இன்று விளைநிலங்களாகவும், மாந்தோப்புகளாகவும் விளங்குகின்றன.

மேற்கண்ட ஊர்கள் சுவடற்றுப்போனாலும், ஊர்ப்பெயராய்வு மூலம் அதன் அடிவேரைக் கண்டறிவதும் - தொல்லியல் ஆய்வு மூலம் பழம் பெருமையை உணர்த்தி உலகிற்கு உண்மையை எழுதிவைப்பதும் வரலாற்று அறிஞர்கள் கடமையாகும்.

அடிக்குறிப்பு :

1. பெரியகுளம் — மதுரைமாவட்டம்
2. A R. E — 416 of 1907
3. கி. பி. — 1216 + 17 + 1 + 1 = 1235
4. கயிலாசநாததர்காடு — உய்யவந்த ஈச்சுரமுடைய நாயனார் திருக்கோயில் மேற்கு, தெற்கு, வடக்குச் சுவர்களின் அடிப்பகுதி
5. வீரபாண்டியநல்லூர்— அரிகேசரி நல்லூர்
6. பாண்டிமண்டலத்துத் துவராபதி நாட்டு எறிபடை நல்லூர் A R. No. 1310 1903 No. 417
7. பெரியகுளம் — இராசேந்திர சோளீச்சுரமுடைய நாயனார் திருக்கோயில் கல்வெட்டுகள்
8. தமிழ்ப்பல்கலைக் கழகம் — (தஞ்சை) கல்வெட்டுத் துறையினர் கண்டுபிடித்துள்ள இரவி கோதையின் தமிழ் வட்டெழுத்துக் கல்வெட்டு — தினமணி 29—10—82
9. டாக்டர் K. K. பிள்ளை. சோழர் வரலாறு
10. ,, ,, ,, ,, பக்கம் — 550
11. ரா. பி. சேதுப்பிள்ளை — தமிழகம் ஊரும் — பேரும் பக் 24 இளவரசன் ஏந்தல் செம்பியன் ஏந்தல் என்ற ஊர்கள் ஏரியினடியாகப் பிறந்தன.
12. திரு. கம்பன் அடிப்பொடி (சா. கணேசன்) இக்கட்டுரை யாசிரியருக்கு எழுதிய மடலில் கூறப்பட்ட கருத்து.

முகவரி :-
புலவர். து. இராஜகோபால்,
53 – கிருஷ்ணன் கோவில்தெரு, தென்கரை, பெரியகுளம்-626501

தமிழ்ப் பொழில்

பதிப்பாசிரியர் குழு

1. திரு. எஸ். நடராசன், எம். எல். ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு புலவர் க. வெள்ளைவாரணனார்,
பேராசிரியர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு புலவர் பி. விருத்தாசலம், எம். ஏ.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4 திரு. புலவர் ச. பாலசுந்தரம்,
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

5. திரு புலவர் சி. கோவிந்தராசன்,
கரந்தை, தஞ்சாவூர்-2.

6 திரு. புலவர் மீனா. இராமதாசன், எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்-2.

7. திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,
அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

			உள் நாடு		வெளி நாடு
1.	ஆண்டு வரி	...	20—00	...	030—00
2.	தனி இதழ்	...	02—00		
3.	ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

Regd No. TN/TJ/17.

உ.

தமிழ் வாழ்க !

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண் :

திரு ....

அவர்கள்

....

....

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல்—சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப்பொழில் (பணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின்—கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர்—ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள் :	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

ஆசிரியரும் வெளியிடுபவரும் : திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேல ராஜ வீதி, தஞ்சாவூர்-613 009.